திராவிடன்

ஏடு : 8 10-6-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணு மலர் : 45

பூந்தமல்லியில் சிறப்புக் கூட்டம்

நாள்: 12-6-55 காலை 10 மணி

இடம் : பூந்தமல்லி விக்னேஸ்வரா தியேட்டர்

தலைவர் : கே. டி. எஸ். மணி

அறிஞர் அண்ணு அவர்கள்

'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற பொருளில் பேசுவார்.

நன்கொடை : ரூ 1, அணு 8, 4.

ஆச்சாரியாரின் அபூர்வ ஆராய்ச்சி!

இலங்கைப்பிரதமர் கொடுத்த பட்டத்தை குல்லுகபட்டர் உறுதிபடுத்திக் கொள்கிறார்!

அலுவலகங்களில் வேலை தேடித்திரிபவர்கள் பல ரகம் உண்டு. வேலை யொன்றும் தற்போதில்லை, பிறகு வாருங்கள் என்று கூறினால் அந்த பதிலை நாணயமாக ஏற்றுக் கொண்டு திரும்பிச் செல்லுபவர் ஒருசாரார்; வேலை யில்லையாம் வேலை. ஆளைப் பாருஆளை என மானேஜரை வசை புராணம் பாடிக்கொண்டே திரும்பிச் செல்லுபவர் மற்ருெருசாரார் அய்யகோ எனக்கு எப்படியாவது வேலை கொடுத்துத்தானுக வேண்டும் என்று வம்படி வளர்ப்பவர்கள் சிலபேர்;

இப்படி வம்படி செய்பவர்களுக்குத்தான் சில சமயங்களில் வேலையும் கிடைத்துவிடும். வேலை கிடைக்கும் வரை பரிதாபச் சிந்து பாடிய இந்தரகப் பேர்வழிகள், கிடைத்த பிறகு அலுவலகத்தையே ஆட்டிப் படைக்கும் அளவுக்கு சேஷ்டைகளைப் புரிவர். கழுத்தைப் பிடித்து வெளியேதள்ளும் அளவுக்கு விஷமத்தனம் செய்வர்.

வெளியேற்றப்பட்ட பின்னராவது இந்தரகப் பேர்வழிகள் திருந்துவார்களா யென்ருல் அதுதான் இல்லை. மீண்டும் அந்தப் பக்கமே திரிந்து கொண்டு ஏதாவது கூப்பாடு போட்டுக்கொண்டு தொல்லை கொடுப்பார்கள், அதாவது இந்த சனியனுக்கு ஏதாவது வேலை கொடுத்து உள்ளே இழுத்துப் போடுங்கள் பெரிய தொல்லையாய் போய்விட்டது என்று கம்பெனி மானேஜரோ அல்லது உரிமையாளரோ, வீட்டு எஜமானரோ கூறுவர்.

*

ஆச்சாரியார் அரசியல் துறையிலே இவ்வித சண்டித் தனத்தில் இறங்கி யிருக்கிருர் என்பதை நாம் இதற்கு முன்னதாகவே விவரித்து எழுதி யிருந்தோம். தேர்தல் நடைபெறும்வரை ஒதுங்கி நின்று வேதாந்தம் பேசிவந்த இந்த ஆச்சாரியார் தேர்தல் முடிந்ததும் முதலமைச்சர் வேலைக்குத் துடியாய்த் துடித்தார்! அதிலே வேறு ஏதோ தன்னை அனைவரும் வேண்டி அழைப்பதுபோல ஒரு நாடகத்தையும் அமைத்துக் கொண்டு எப்படியோ முதலமைச்சர் வேலையையும் பெற்ருர்! ஆனல் உடனே மக்களையே ஆட்டிப்படைக்கும் அழிவு வேலையில் இறங்கியதாலே இவரையும் மக்கள் மன்றம் பதவியிலிருந்து இறக்கி வீட்டுக்கனுப்பியது.

*

அதற்குப் பின்னர்தான் ஆச்சாரியாரின் அரசியல் சண்டித்தனம் தலைவிரித்தாட ஆரம்பித்திருக்கிறது, மீண்டும் ஏதாவது பதவி கொடுக்கிறீர்களா அல்லது ஆட்சி பீடத்திலிருப்பவர்களின் செயலுக்கு நேர்விரோதமாக ஏதாவது கூப்பாடு போடட்டுமா அது போலவே மக்களை வம்புக்கிழுக்கட்டுமாயென்று துடி துடிக்கிருர்.

*

பாண்டுங் மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதமரை இந்த ஆச்சாரியார் அவதூருகப் பேசிப் பிறகு சாஷ்டாங்க மன்னிப்பு கேட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

அணுகுண்டுகளை அமெரிக்கா கடலில் தூக்கி எறிந்து அழித்து விடவேண்டும். அதற்கு அமெரிக்கா உடன்படாவிடில் அமெரிக்காவின் உதவியை இந்திய சர்க்கார் பெறுதல் கூடாது என கொக்கரித்தார். இது குறித்து நேரு பண்டிதரே—ஆச்சாரியாரின் போக்கினை — அவசரக்குடுக்கைபோல ஏதேதோ பேசுவதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார். இந்திய நிதி அமைச்சரும் ஆச்சாரியாரின் வரட்டு வேதாந்தத்தை கேலி செய்து பேசினா.

காசநோய் ஊசி போடுவது சம்பந்தமாக இந்த ஆச்சாரியார் முழநீளம் அறிக்கைவிட்டுப் பிறகு சென்னை சர்க்காரால் மூக்குடைபட்ட விவரத்தையும் நண்பர்கள் அறிவார்கள் என எண்ணுகிரேரும். ஆக கடந்த ஒரு திங்களுக்குள்ளாக ஆச்சாரியார் இவ்வளவு திருவிளையாடல்களைப் புரிந்து சாட்டையும் தக்க சூடுகளையும் பெற்றிருக்கிருர். இதற்குக் காரணமென்ன? பொதுவாழ்விலேயிருந்து நான் இன்னும் விலகிவிடவில்லை. எனக்கு ஏதாவது பதவி கொடுக்க வேண்டும் இல்லாவிடில் இப்படித்தான் வம்பு பேசித் திரிவேன் என்பதைத் தவிர வேறுயிருக்க முடியுமா என்பதை வாசகர்களை சிந்தித்துப் பார்க்க வேண்டுகிரேரும்.

இந்த வெத்துவேட்டுப் பேச்சுகளோடு ஆச்சாரியார் தனது அபஸ்வரத்தை நிறுத்திக் கொண்டாரா யெனில் அதுவுமில்லை. மாருக மேலும் மேலும் அர்த்தமற்ற கூப்பாட்டினைப் போட்டு குட்டை குழப்பிக் கொண்டு வருகிருர்.

சென்றவாரம்--தருமபுரஆதீன மடத்துக்கு இந்த குல்லுகபட்டர் போனராம்—அங்கே மடாதிபதியால் ஆச்சாரியாருக்கு துணியும் போர்த்தப்பட்டதாம்! இதைப் பற்றி யெல்லாம் கூட நமக்குக் கவலையில்லை. ஆனல் ஆச்சாரியார் அங்கு செய்த அபூர்வ ஆராய்ச்சியும் அதன் விளைவான பேச்சினையும் நாம் படிக்கும்போது, இலங்கைப் பிரதமர் கொத்தலவாலா தனக்குக் கொடுத்த சர்டிபிகேட்டை ஆச்சாரியார் உறுதிப் படுத்திக் கொள்ள முனைகிருர் என்றே கூற வேண்டி யிருக்கிறது.

கடவுள் எங்கே யிருக்கிருர்? என்பதைப்பற்றி தருமபுரஆதீன மடத்தில் ஆராய்ச்சி செய்ய முற்பட்டு விட்டாராம் குல்லுகபட்

11-ம் பக்கம்

"இவர்களெல்லாம் ஆசாமிகளாம்!"

கடவுளைக் காட்டுகிறேன் என்று சொல்லும் போலிச் சாமியார்களை நம்பாதீர்கள் என அண்மையில் கோட்டாறு கூட்டத்தில் பேசிய குன்றக்குடி மடாதிபதியே தெரிவித்திருக்கிருர்.

கூடை

சுகாதாரமற்ற வீதி — தெருவில் என்ன என்ன இருக்கக் கூடாதென்று நாம் நினைக்கிறோமோ அவ்வளவும் அங்கிருந்தன. உயர்ந்த மாளிகைகளும் கண்கொள்ளாக் காட்சிகளும் போட்டி போடும் சிங்காரச் சென்னையிலே இதுவும் ஓர் காட்சி என்ற எண்ணம் எழுந்ததும் என்னையும் அறியாமல் சிரிப்பும் கூடவே எழுந்தது. வீதியிலே மக்கள் நடமாட்டம் இருப்பதாகவே தெரியவில்லை மத்தியான வேளை. கோடையின் கொடுமையை எடுத்துக் கூறுவது போல வெயில் காய்ந்துக் கொண்டிருந்தது. ஓர் திண்ணையில் 'மிருஷ்டான்ன போஜனம்' முடித்துக் கொண்டு பூணூலைத் தடவிக் கொண்டு விசிறியைக் கையிலேந்தி, லாவகமாகத் தனது தொப்பையைத் தடவிக்கொடுத்தவாறு உட்கார்ந்திருந்தார் ஓர் ஐயர்வாள்.

எனக்கு முன்னால் ஓர் மனிதன் சென்று கொண்டிருந்தான். செம்பட்டை மயிர் அடர்ந்த தலை, அழகை மட்டுமல்ல, எண்ணெய் கண்ட காலத்தைக் கூட மறந்திருக்குமென்று தோன்றியது! மெதுவாக நடந்து சென்றுக் கொண்டிருந்தவன் திடீரென்று நின்றான். யாரோ பின்னால் வருவது தெரிந்தவன் போலத் திரும்பிப் பார்த்தான். ஒளியிழந்த கண்கள், உருக்குலைந்த உருவத்தின் உள்ளக்கிடக்கையை எடுத்துக் கூறுவதுபோலச் சிவந்து காட்சியளித்தன. லேசாகச் சிரித்தான், ஆனால் கோடை காலத்துக் காலைப் பனிபோல அது திடீரென்று மறைந்தது. அருகில் தெரிந்த ஓர் குப்பைத் தொட்டியை உற்றுக் கவனித்தான் பிறகு கையைப் போட்டு ஏதோ தேடினான். ஓர் சிறிய கிழிந்து எலும்புகள் தொங்கி நிற்கும் கூடை ஒன்றை அதிலிருந்து எடுத்தான். கரி புரண்ட கூடை திரும்பிப் பார்த்தான். அதில் ஒன்றுமே இல்லை. திரும்பவும் தொட்டியிலேயே போட்டு விட்டான். வேதாந்த ரகசியங்கள் அனைத்தும் தனக்கு மிக மிக எளிதானவை என்பதுபோல அனுவசியமாகச் சிரித்தான். ஆனால்...

திடீரென்று சிரிப்பு நின்றது. ஏன்! முன்னால் ஓர் அழகான மங்கை! அவளை விழுங்கி விடுபவனைப்போல் அகல விரிந்த கண்களுடன் பார்த்துக் கொண்டு நின்றான் அவன்! என்ன திமிர்! வயிற்றுக்கு வழி தெரியவில்லை; பெரிய புராணத்தை கரைத்துக் குடித்திருக்கிறான். எனக்குக் கோபம்தான் வந்தது. ஆனால் மிக்க ஏமாற்றம். அவன் அந்த மங்கையைக் கவனிக்கவில்லை, மங்கையின் கையிலிருந்த இலையைக் கவனித்தான். இலை, குப்பைத் தொட்டியில் கிடந்த அந்தக் கூடையில் சென்று விழுந்தது. ஆவலுடன் ஓடினான் அவன். சிறு குழந்தையை லாவகமாக எடுப்பதுபோல அந்தக் கூடையை எடுத்தான். அந்த இலையிலிருந்த மிச்சத்தை ருசியுடன் புசித்துக் கொண்டிருந்தான். எனக்கு அழுகை வந்தது. கண்களிலே கண்ணீர்த்துளிகள் தேங்கி நின்றிருக்க வேண்டும். அவனையும் அந்தக் கூடையையும் திரும்பத் திரும்ப பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அந்தக் கரிக் கூடை சிரித்தது! பலமாகச் சிரித்தது! கூடையை வீதியிலே போட்டுவிட்டு அவன் சென்று விட்டான். நான் அந்தக் கூடையை உற்றுக் கவனித்தேன். அது திரும்பவும் சிரித்தது. உரக்கச் சிரித்தது.

என்னய்யா அப்படிப் பார்க்கிறீர். இந்த நாட்டின் நிலைமை குறித்து வருத்தப்படுகிறீர்களா! அவன் கதையும் என் கதையும் ஏறக்குறைய ஒன்றுதான். இந்தக் காலத்தில் மனிதன் தன்மை பணத்திற்கு அடிமையாகி விட்டிருக்கிறது...... இன்று இந்தக் கரி வேடத்தில் பார்க்கும்போது உமக்குப் பிடிக்காது. ஆனால் சுமார் ஒரு வருடத்துக்கு முன்னால் என்னை நீங்கள் பார்த்திருந்தால்......

என்ன! என்ன! பார்த்திருந்தால்!

அதொரு பெரிய கதை.

கூடை ஒரு பெருமூச்சைக் கிளப்பியது பிறகு தனுடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தது...

உண்மை உள்ளம் படைத்த மனிதரே; கேளும் என் கதையை நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் என கூட்டத்தவருடன் ஒன்றாக வாழ்ந்து வந்தேன். அன்று எங்கள் கூட்டத்தை மூங்கில் கூட்டம் என்று அழைத்து வந்தார்கள். ஒரு நாள் ஒருவன் வந்தான். என்னையும் என் கூடப் பிறந்த சிலரையும் வெட்டி எடுத்துக் கொண்டான். பிறகு ஒன்றாக வைத்துக் கட்டி தலையில் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். நான் அப்பொழுது அழுது கொண்டிருந்தேன், எப்படித்தான் அழாமலிருக்க முடியும் நானும் என் கூட்டத்தவரும் காற்றிலே தலையசைத்து நடனமாடியது, அப்பொழுது நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து புல்லாங்குழலின் ஓசையிலே பாட்டுப் பாடியது அவைகளை எப்படித்தான் என்னால மறக்க முடியும்; முடியவே முடியாது...

பிறகு நாங்கள் ஓர் புகைவண்டி நிலயத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு எங்கள் இனத்தவர்கள் சேர்த்து சேர்த்து பிணைக்கப்பட்டு ஒன்றாகக் கிடந்தார்கள் எங்களை எல்லோரையும் ஒரு மூடியில்லாத பெட்டியில் திணித்தார்கள். ஒரே புழுக்கமாக இருந்தது. பிறகு உயர்ந்த மாளிகைகளும் மக்கள் நெருக்கடியும் நிறைந்த இந்தப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தோம். எங்களை ஓர் லாரியில் ஏற்றி வந்து மைதானத்தில் ஓர் கடைக்கு முன்னால் போட்டார்கள். சிறிது நாளில் என்னை மெல்லிய பாகங்களாக அறுத்தறுத்து தண்ணீரில் தோய்த்து காயவைத்தார்கள்' ஆனால்—

பிறகு அழகாக பிணைத்தார்கள், அந்த பெண், அவள் அணிந்திருந்த ஆடைகள் ஒரே துர்நாற்றமடித்தன. அவள் தான் மிகலாவகமாக என் ஒவ்வொரு அங்கங்களையும் வளைத்து வளைத்து பிணைத்தாள். பிறகு வர்ணம் தேய்த்தாள். நான் மணமகளைப் போல அழகாக அலங்காரத்துடன் காட்சியளித்தேன். ஒருநாள் ஓர் பெண்மணி கடைக்காரனுக்கு ஆறணா தந்துவிட்டு என்னுடன் வீடு திரும்பினாள். வீட்டிற்கு வந்ததும் குளித்துவிட்டு நன்றாக அலங்கரித்துக் கொண்டு பக்கத்து வீட்டின் தோட்டத்தில் புகுந்து பலரகமான பூக்களை அறுத்தாள். நான் அவைகளை பெற்றுக் கொண்டேன். பிறகு வீட்டிற்குத் திரும்பினாள்: ஓர் அறையில் பல வகையான படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கிருட்டிணன், கணபதி, சரஸ்வதி பட்டியல் நீண்டுக்கொண்டே சென்றது. என்னை படத்திற்கு முன்னால் வைத்து பூக்களை ஒவ்வொன்றாக பெற்றுக்கொண்டு அர்ச்சனை செய்தாள்.

கிருஷ்ண பரமாத்மா, அவருக்கு நீதான் நல்ல புத்தி தரவேண்டும். விநாயகப் பெருமானே புத்தி புத்தி என்றெல்லாம் சொல்லிக் கொண்டு கன்னத்தில் அறைந்துக் கொள்ளுவாள். விழுந்து விழுந்து கும்பிடுவாள் எனக்குச் சிரிப்புத்தான்வந்தது. என்ன விசித்திரமான மனிதர்கள், அழகான பூக்களை விதவிதமாக அறுத்து வைத்துக் கொள்கிறோம் விதவிதமான வாசத்தை அடைவதற்காக. நல்ல ஓவியங்களை சுவரில் தொங்க விடுகிறோம். பலரகமான கலையின் நுணுக்கத்தைக் கண்டு களிப்பதற்காக, ஆனால் கடவுளின் உருவங்களை பலரகத்தில் வைத்துக் கொண்டு, குழந்தைக்கு பெயர் வைப்பதுபோல அதற்கும் ஒவ்வோர் பெயர் வைத்துக் கொண்டு கும்பிடுகிறார்களே, அதைப் பார்த்து என்னவென்றுசொல்வது! மனிதகுலம் தோன்றுவதற்கு முன்னால் கடவுள் இல்லை. மனிதன் தனக்கடங்காத சக்திகளைக் கண்டான். இதற்கு ஏதோ ஓர் சக்தி காரணமாக இருக்க வேண்டுமென்று தன கற்பனையைப் பறக்க விட்டான். ஓர் உருவமைத்து அதற்கு கடவுள் என்ற பெயரிட்டான். மனிதன் கடவுளை உண்டாக்கினான். இந்த உண்மை அந்தப் பெண்ணுக்குத் தெரியவில்லை அதுகிடக்கட்டும். நம்பிய கடவுள் உண்மையிலேயே இருந்திருந்தால் அவனுக்குத் துணை செய்திருக்கமாட்டாரா! அதுதான் இல்லை.

ஒருநாள் அழகான ஆடைகள் அணிந்துக் கொண்டு என்னையும் கையிலெடுத்துக் கொண்டு பூக்களுக்குச் சென்றவள் வீடு திரும்பிய பொழுது அவளுடைய கணவன் கோபத்துடன் நின்றுக் கொண்டிருந்தான் அவள் பயத்துடன் மெதுவாக நெருங்கினாள்,

'எங்கேயடி அலங்காரம் செய்துக் கொண்டு கிளம்பினாய்? யாரிடம்...!' என்று கேவலமாகப் பேசிவிட்டு என்னை அவளுடைய கையிலிருந்துபறித்தெடுத்து தூரத்தில் எறிந்தான். பிறகு அவள் தலைமயிரைப் பிடித்து பலமாக அடிக்க ஆரம்பித்து விட்டான். என்னை தூரத்தில் எறிந்ததில் என்னுடைய சில எலும்புகள் ஒடிந்து விட்டது போல் வேதனை தந்தது. ஆனால் அவளுடைய நிலைமை என்னுடைய துயரத்தை மறக்கச் செய்தது. இதுபோல்தினமும் நடந்துக் கொண்டிருந்தது. ஓர் நாள் என்னை ஜன்னல் வழியாக வெளியே எறிந்து விட்டான் அவளை தடியால் தலையில் தாக்கினான் ரத்தம் கொட்டியது. அவனோ கவனிக்காமல் சென்று விட்டான், நான் சாரளத்தின் வழியாக அங்கு நடப்பவைகளனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்தேன் பலமான புகை ஜன்னல் வழியாக வெளியே கிளம்பியது பிறகு சில சத்தங்கள் கேட்டன. அந்த அழகான பெண் அகோரமாகக் காட்சியளித்தாள்! தலைபெருத்து கருகியிருந்தது. ஏதோ எண்ணை ஊற்றிக் கொண்டுபற்ற வைத்துக் கொண்டாளாம்!

நாட்கள் கடந்து சென்றன. ஓர் பெண் என்னை வழியிலே பார்த்து எடுத்துச் சென்றாள். அவள் மீன்வாங்கி வருவதற்காக என்னை உபயோகப்படுத்தினாள்

ஒரே பிணநாற்றம்தான். அவளுக்கு வயதான ஓர் கணவன் இருந்தான் இந்தத் தள்ளாதகிழவர் ஏன் இவளை—இந்த இளங்கொடியை மணந்துக் கொண்டார்! இவரால் இவள் அடையும் சுகமென்ன என்று நான் வியந்தேன். ஆனால்—

பிறகுதான் உண்மை விளங்கியது! அவன் பெரிய பணக்காரன். செல்வாக்கு பெற்றவர். துணைக்கொரு பெண் என்பதற்காக திருமணம் செய்து கொண்டான். அவன் இல்லாதபோது அங்கு அவனுடைய நண்பர்கள் ஒவ்வொருவராக வந்து செல்வார்கள். அவனுக்கோ கண் நன்றாகத் தெரியாது. அவன் முன்னிலையிலேயே சில நாடகங்கள் நடத்திக் காண்பிப்பாள் அந்த சொகுசுக்காரி. கடவுளின் நினைவுகூட அவளுக்கு எழுந்ததில்லை. பஞ்சமும் பட்டினியும் கம்யூனிசத்தை வளர்ப்பதுபோல துயரமும்தொல்லைகளும் கடவுளுக்கு ஊன்றுகோலாகக் காட்சியளித்தன.

பிறகு ஒரு நாள் ஓர் ஏழைப் பெண் சிறிது கரித்தூளை இந்தப் பெண்ணிடம் கடன் கேட்டாள், இவள் என்னிடம் கரித்தூளை தந்து அவளுக்குத் தந்து விட்டாள். அன்றிலிருந்து நான் கரிக் கூடையாக மாறினேன் இப்பொழுது நான் ஏழையின் குடிசையிலே இருந்தேன் அவள் கரிக் கூடையாக என்னை மாற்றிவிட்டாள். பாவம் சாப்பாட்டிற்கே அவளுக்கு திண்டாட்டம். ஒரு நாள் அடுப்பில் மறதியாக என்னை வைத்துச் சென்றவள், நான் பற்றி எரிவதைப் பார்த்து தண்ணீர் ஊற்றினாள். நான் அலங்கோலமாகக் கிடந்தேன். பிறகு வெளியே கொண்டு வந்து போட்டாள் இவளும் கடவுளை வேண்டிக் கொள்வதை நான் பார்த்தது கிடையாது ஏழைக் கணவன்! அன்பாக வாழ்ந்தார்கள், பசியிலும் பண்புடன் வாழ்ந்தார்கள். மனிதனை மனிதன் இழுக்கும் தொழிலை அவன் செய்கிறான்!

எனக்கு இந்த மனிதர்களைப் பற்றிய மிகமிகக் கேவலமான எண்ணம்தாம் எழுகிறது. பாருங்கள்! பறவைகளும் மிருகங்களும் ஒற்றுமையாக தன் இனத்தவருடன் கூடிய வரையில் ஒன்றாக வாழ்கின்றன. உணவுப் பஞ்சம் அவர்களைப் பொறுத்தவரையில் ஏற்படுவது கிடையாது, இயற்கையுடன் அவர்கள் ஒன்றி வாழ்கிறார்கள். வெயிலும் மழையும் பொருட்படுத்தாத வாழ்வு அவைகளின் உடம்பை வளம்பெறச் செய்கிறது. ஆனால் மனிதன் இயற்கையின் மென்மையான பகுதிகளைக் கூட உபயோகித்துக்கொள்ள மறுக்கிறான். செயற்கையை அதிகமாக விரும்புகிறான்; தொல்லையும் அவனுக்கு அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. கூடை சற்று நேரம் பேசாமலிருந்தது.

உனக்கேன் இந்தத் தொல்லை! கள் நீ இயற்கையோடு ஒன்றித்தானே வாழ்ந்தாய்!—நான் கேட்டேன்.

ஆமாம்! ஆனால் மனிதனின் கையிலே சிக்கியதுதான் என் துயரத்திற்குக் காரணம்!—கூடை லேசாகச் சிரித்தது.

அந்த கரிக் கூடையை யாரோ கையிலெடுத்தார்கள். நான் என் சுயநினைவு பெற்றேன். ஓர் கிழவி தன் கையிலிருந்த சாணியை அதில் போட்டுக்கொண்டு எடுத்துச் சென்றாள்!

டி: புருடோத்தமன், சென்னை

வரப்பெற்றோம்

எரிக்கப்பட்டாள்

எழுதியது
சத்தியவாணிமுத்து அம்மையார்

உயிருடன் எரிக்கப்பட்ட பிரான்சு நாட்டு வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க்கின் வரலாறு அழகுபடத் தீட்டப்பட்டுள்ளது இந்நூலில். வீரமங்கை ஜோன்—மதவாதிகளின் மாயா வாதங்களை எதிர்த்த அம்மங்கையர் திலகம் உயிருடன் கொளுத்தப்பட்ட வரலாறு உள்ளம் உருகும் வண்ணம் தெள்ளு தமிழில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

நாட்டுக்காக தன்னைத் தியாகம் செய்து கொண்ட ஒரு உத்தமியின் வரலாற்றை அதுவும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒரு அம்மையாராலேயே தீட்டப்பட்டிருக்கும் இவ்வுண்மை வரலாற்றை அனைவரும் படித்து பயன் பெற வேண்டுகிறோம். விலை ரூ 1

கிடைக்குமிடம்: மதிமன்றம் 38, பிடாரியார் கோயில் தெரு, சென்னை 1.

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

கேள்வி? பதில்.

—அஞ்சா நெஞ்சன்—

கே: 27-5-55 திராவிடன் 'இதழில் 'அரசியல் அஞ்ஞானங்கள்' என்ற கட்டுரையில் 'சிறைக்குச் செல்வதற்கு முன்னதாகவே சிற்பியை தயார் செய்து வைத்துக் கொண்டு' என தோழர். சிவஞானத்தைப்பற்றி குறிக்கப்பட்டுள்ளதே அதன் விளக்கம் என்ன?

—சி. காதற்கனி, மேலூர் மதுரை.

ப: பொதுப்பணியிலே ஈடுபாடுடையவர்களில் சர்க்காரின் அடக்குமுறைக்கு ஆளாகி சிறை சென்றவர்கள் இதுவரை தங்களைப் பற்றி தாங்களே பெருமை பீத்திக் கொண்டதில்லை. ஆனால் தோழர் ம. பொ. சிவஞானம் கூட்டங்களில் பேசுகையில் 'இந்த சிவஞானம் இருக்கின்றானே சிப்பி யேந்தி சிறை சென்ற வீரத் தமிழன்' என்று 'போர்' அடிக்கிறார்! சிறை செல்லுபவர்கள் யாராயிருப்பினும், சிறைக்குள் சென்ற பின்னரே அதிகாரிகளால் சிப்பி (தட்டம்) கொடுப்பது வழக்கம். ஆனால் இந்த சிவஞானமோ சிப்பி ஏந்திக் கொண்டே சிறை சென்றாராம்!—கேட்டீர்களா தலை கொடுக்கும் தமிழனின் வீரப் பிரதாபத்தை.

*

கே: தி மு. கழகம், வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் மத்தியில் ஓர் மதில் சுவர் ஏற்படுத்துவதுதான் அதன் நோக்கம் என்று 22-5-55 'ஜனசக்தி' இதழில் ஒரு தோழரின் கேள்விக்கு பதில் அளித்திருக்கிறதே இதுபற்றி தங்கள் அபிப்ராயம் என்ன?

ப. முல்லை மலரன், ராசிபாளையம்

ப: பரந்த கண்ணோட்டக்காரர்களின் அரசியல் போக்குக்கு ஏற்றது போலத்தானே அவர்களின் வியாக்கியானங்களும் இருக்கமுடியும்? நொள்ளைக் கண்ணனிடம் நல்ல பார்வை எதிர்பார்க்க முடியுமா? எனவேதான் திராவிட நாட்டுப் பிரிவினை யென்பது வடநாட்டாதிக்கம் உள்ளிட்ட வேறெந்த ஆதிக்கமும்—நாடும் திராவிடத்தை அடக்கியாளவோ அல்லது அரசியல் பேரால் பொருளாதார வேட்டையாடவோ முடியாத சுதந்திர ஆட்சி முறையை நிர்ணயிப்பதென்ற உண்மை விளக்கம் அரசியல் குருடர்களுக்குப் புலப்படவில்லை. எனவே யானையைத் தடவிப் பார்த்த குருடர்களைப் போல தி. மு. கழகக் கொள்கையைப் பற்றி கம்யூனிஸ்ட் ஏடு கதையளக்கிறது.

*

கே: அஞ்சா நெஞ்சரே, தி. மு. கழகத்தைத் திருத்த ஒரு கழகம் தேவை என்று என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கூறியதாக, தி. மு. க.விலிருந்து விலகி காங்கிரசில் சேர்ந்துள்ள ஒருவர் மதுரையிலே பேசி யிருக்கிறாரே—இது உண்மையா? டூப்பா?

இ. டி. முத்துசாமி, எழுகாம்வலசு.

ப: உங்களுடைய கேள்வியிலிருந்ததே அந்த ஆளை ஓர் டூப்

பம்பாய் தோழர்களுக்கு வேண்டுகோள்

பேரன்புடையீர்,

வணக்கம் பல. அண்மையில் திருச்சியில் நடைபெறவிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டை சிறும் சிறப்புமாக நடத்தி வருங்காலத்திற்கேற்ற முறையில் நல்ல பல திட்டங்களை தீட்டி செயல் படச் செய்ய வேண்டியது நமது கடமை. மாநாடு நல்ல முறையில் நடைபெற பொருள்பல தேவைப் படுகிறது. பொதுக் குழுவின் முடிவை ஏற்று திராவிடத்திலே யுள்ள கிளைகள் மாநாட்டுக்கு நிதி திரட்டும் பணியிலே ஈடுபட்டுள்ளது. எல்லைக் கோட்டிற்கு அப்பாலிருக்கும் நாம், உடலுழைப்பு நல்க இயலாதிருந்தாலும் நம்மாலியன்ற பொருளுதவி நல்க நமது இலட்சியக் குரலை, ஆட்சியாளர் அறியச் செய்ய வேண்டியது மிக மிக அவசியமாகும், எந்த ஏகாதிபத்தியம் நாட்டுப் பிரிவினையைக் கண்டித்து வருகிறதோ, மொழிவழி மாகாணப் பிரிவினை ஆபத்து நிறைந்தது என விஷமப் பிரசாரம் செய்து வருகிறதோ அதே ஏகாதிபத்தியத்தின் தலைநகரிலும், திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு உண்டு என்பதை டெல்லி ஏகாதிபத்தியம் உணரச் செய்ய வேண்டும். நாட்டுப் பிரிவினையை ஏளனம் செய்யும், திராவிடத்திலேயுள்ள தன்னலவாதிகளும் உணரட்டும், திராவிட நாட்டு பிரிவினைக்கு வடநாட்டில் வாழும், திராவிடர்களிடமிருந்தும் ஆதரவு உண்டு என்பதை,

நாட்டுப் பிரிவினையே நமது மூச்சாகக் கொண்டு, வடநாட்டிலும் கிளைகள் அமைத்து நாட்டுப் பிரிவினையின் அவசியத்தையும், அவசரத்தையும் மக்களுக்கு அவ்வப்போது உணர்த்திக் கொண்டிருக்கும் பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகம், தாராவிக் கிளையின் உறுப்பினர்கள், உங்களிடையே மாநில மாநாட்டு நிதிக்காக வரவிருக்கின்றனர். ஜூன் திங்கள் 11, 12 சனி ஞாயிறு ஆகிய நாட்களில் இலட்சியக் குரலை அட்டையிலே பொறித்துக் கொண்டு உண்டியலை கையிலே ஏந்திக்கொண்டு வரும் உறுப்பினர்களிடம் உங்களால் இயன்ற அளவு பொருளுதவி நல்கி எங்கள் உழைப்பை மேன்மேலும் ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு தரும் நல்லவர்களே! தன்னலமற்ற நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகம் தாராவிக் கிளையின் உறுப்பினர்கள் ஜூன் திங்கள் 11-ம் நாள் சனிக்கிழமை மாலையிலும் 12-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும் தாராவி வீதிகளிலே மாநில மாநாட்டு நன்கொடைக்காக வரவிருக்கின்றனர். உங்கள் வசதி வாய்ப்புக் குத்தக்கபடி பொருளுதவ வேண்டுகிறேன்.

பம்பாய் வாழ் திராவிடப் பெருங்குடி மக்களே! உங்களுடைய ஆதரவும் அன்பும் எங்களுக்கு உண்டு என்ற நம்பிக்கையில் இவ்வேண்டுகோளை விடுக்கிறேன். ஆவனசெய்வீர்களென்ற அசையாத நம்பிக்கை என்றென்றும் எங்களுக்குண்டு.

அன்பன்,

சி, த. மு. இர. ஆரியசங்காரன்

செயலாளர், பம்பாய் தி. மு. க.

(தாராவி கிளை)

பேர்வழி எனச் சித்தரித்துவிட்டீரே இதைவிட நான் வேறு என்ன சொல்ல முடியும்,

*

கே: பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப சூழ்நிலை எப்போது தீரும்?

—எம். எஸ். காதர், திருவல்லிக்கேணி

ப: பாகிஸ்தானிலுள்ள அரசியல் தலைவர்களின் மூளைக் குழப்பம் தீர்ந்ததும், அரசியல் குழப்ப சூழ்நிலையும் முடிவுறும்.

*

கே: திராவிட நாட்டு ஆட்சியில் கோயில் சொத்துக்களை என்ன செய்யப்படும்?

—ஆர். கணபதி, மயிலை.

ப: மக்களின் நல்வாழ்வுக்காக பயன் படுத்தப்படும்.

*

கே: சர்வதேச அரசியல் விவகாரங்களில் திறமைபடைத்த தென்னாட்டு மேதைகள் யார்?

—வி. எம். சாமி. வேலூர்

ப: சர். ஏ. ராமசாமி, வி. கே. கிருஷ்ணமேனன்

குவியல்

எழுத்தாளன் என்பவன் அவனுடைய நாட்டின், இனத்தின் உணர்ச்சி மயமான ஊதுகுழல்; அதன் செவி, கண், இதயம் எல்லாம் அவன்தான். அவன்தான் அவனது சகாப்தத்தின் குரல்! அவன் பழமையைப் பற்றி எவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நிகழ்காலத்தில் தனது சமுதாயத்திற்கான கடமைகளை வரையறுக்கவும், நிறைவேற்றவும் முடியும்.

—மாக்ஸிம் கார்க்கி

அடடா! புதியவையும் உயிருள்ளவையாய் எத்தனையோ உண்மைகள் பிறக்கின்றன! அவைகளை ஒழிப்பதற்கு உயிரற்ற விஷயங்களை 'பழமையன' என்ற ஒரு காரணத்தினால், பெருமைகொடுத்து முன்னணிக்கு கொண்டு வருகிறார்களே! அரசியல், பொருளியல், கலையியல் இவற்றிலுந்தான் இந்த ஈவிரக்க மற்ற தொழிலும் பிரசாரமும் நடக்கிறது. உலகம் என்றைக்கு சீர்திருந்தப் போகிறதா?"

டெனிஸனின் இதயஒலி—டி. கே. சி.

மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்வு இருக்கிறது என்கிறார்களே, அதை நான் நம்பவில்லை. ஆண்டவன் இந்த நிலையில் வைத்திருக்கிறான் என்ற நிலை மாற வேண்டும்.

தெய்வந்தான் அனைத்தையும் ஆட்டிப் படைக்கிறது என்ற கொள்கை முன்பு இருந்தது. தெய்வங்கூட மனிதனுகவே அமைத்துக் கொண்ட ஒரு மூலகாரணமேயாகும்.

கடவுள் என்ற சொல் மனிதனின் நிராதரவைக் காட்டுகிறது. மனிதனுக்கு புறம்பான ஒருதெய்வ வழிபாடு வேண்டாம்.

—ஆல்டஸ்ஹக்ஸிலி

பொருள் மீது பற்று வையுங்கள் என்கிறேன் நான். பொருள் அழியக்கூடியது என்பார்கள் ஆத்மீகவாதிகள். அழியக்கூடிய வரையில் பொருளை உபயோகியுங்கள் என்கிறேன் நான்.

—அறிஞர் அண்ணாதுரை

ஒரு நாட்டின் இலக்கியம் வீழ்ச்சி யடையத் தொடங்கி விட்டதா? அப்படியானல் அந்த நாடே வீழ்ச்சி யடையத் தொடங்கி விட்டது என்றுதான் பொருள். ஏனெனில் ஒருநாடும் அதன் இலக்கியமும் வீழ்கிறபோது ஒன்ருக வீழ்வதுதான் வாடிக்கை.

—கதே

ஒழுக்கம், ஒழுக்கம் என்கிறோமே அது என்ன தெரியுமா? வேறொன்றுமில்லை. அதிகாரத் தொனியில் பிறக்கும் சொற்களைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவது அவ்வளவுதான்!

—ஹாவலாக்எல்லிஸ்

நேரடியாக செய்யப்படும் சீர்திருத்தங்களைக் காட்டிலும் சிறந்த சீர்திருத்தங்களை இலக்கியம் மக்களிடத்தில் புகுத்துகிறது.

—பண்டிதநேரு

தொகுத்தது : சேரன் தம்பி

திராவிடன்

சென்னை : 10—6—55 : வெள்ளி

ரெயில்—பஸ் இலாகா மந்திரிகளின் வாய்ப்பந்தல் !

●

நரி வலம் ஓடினால் நல்லதா இடம் வந்தால் நன்மையா? என்று கேட்டாராம் ஒருவர். அது எப்படியாவது ஓடித் தொலையட்டும், மேலே விழுந்து கடிக்காமலிருந்தால் அதுவே நல்லது என்று பதில் கூறினாராம் மற்றவர்.

அதுபோலவே காங்கிரசாருள் ஆட்சி முறையில் நன்மை இருக்கிறதா அல்லது அவர்கள் அடிக்கடி விடுக்கும் அறிக்கைகளில் நன்மைகள் தொக்கி நிற்கின்றனவா யென்று கேட்டால் அவர்கள் வாயைப் பொத்திக் கொண்டு பேசாமலிருந்தாலே போதுமானது: சும்மாயிருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி என்பதைப்போல அறிக்கைகள் விடுத்து வாழ்வில் ஏற்கனவே நலிந்துள்ள மக்களுக்கு மனவேதனை யளிக்காமலிருந்தாலே போதும் என்றே நாம் கூறவேண்டி யிருக்கிறது.

உதாரணமாக ரெயிலில் பிரயாணம் செய்யும் 3 வது வகுப்பு பிரயாணிகளுக்காக ரெயில்வே நிர்வாகம் இதைச் செய்யப் போகிறது அதைச் செய்துவிட்டது; படுத்து தூங்குவதற்காக தனி இடங்கள்; மேல் வகுப்பு பிரயாணிகளுக்காக செய்துள்ளதைப்போலவே மூன்றும் வகுப்பினருக்கும் உணவுக்காகத் தனிவண்டி, மின்சார விசிறிகள் மற்றும் பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் ரெயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியிலிருந்து அந்த இலாகாவின் குட்டி தேவதைகள் வரை ஓயாமல் கூப்பாடு போட்டு வருவதை அனைவரும் அறிவர். அதுமட்டுமல்ல பத்திரிகை பலம் தங்களிடத்தில் இருக்கிறது என்பதற்காக இந்த கயிறு திரிக்கும் வித்தைகளை விவரித்து நீண்ட அறிக்கை நாள்தோறும் வெளியிடப்படுகின்றன. இத்துடன் நிற்காமல் வானொலி மூலமாகவும் இந்த அபஸ்வரம் ஒலி பரப்பப்படுகிறது.

ஆனால் நடைமுறையிலோ 3-வது வகுப்பு பிரயாணிகள் படும் தொல்லை நாளுக்குநாள் காசநோய்பால வளர்ந்து வருகிறது. உணவு.க்கான தனி வசதியோ அல்லது படுத்துறங்.. பிரத்யேக ஏற்பாடுகளோ செய்யாவிட்டா..லும் சாதாரணமாக உட்கார்ந்து கொண்டு போவதற்காகிலும் இடவசதி செய்துதரப்பட்ட..ாலே ரெயில்வே இலாகாவினரை ஆபத்பாந்த.. ..வர்களே எனப் போற்றி கைகூப்பி வணக்கம் ..தரிவிப்பார்கள் 3-வது வகுப்பு பிரயாணிகள்!

இன்று ரெயில் பிரயாணத்தில் .. அதிலும் நெடுந்தூரம் பிரயாணம் செய்யு.. 3-வது வகுப்பு பிரயாணிகள் படும்தொல்லை சகிக்க முடியாது. கூட்ஸ்வாகன்களில் செல்லும் சாமான்களாகிலும் சற்று வரிசைக்கிரமமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஆனால் திருவனந்தபுரம், தூத்துக்குடி, நெல்லை, தனுஷ்கோடி, பெங்களூர், மலபார் நீலகிரி செல்லும் (மெயில்—சாதாரண) வண்டிகளில் 3-வது வகுப்பில் பிரயாணம் செய்பவர்களின் நிலையைக் காணவேண்டுமானால் ரெயில்வே இலாகா அமைச்சரும் அதிகாரிகளும், ஏதோ ஒரு நாளைக்கு ஒத்திகை என்பதைப்போல அல்லாமல் 3-வது வகுப்பு பிரயாணிகளோடு ஒரு மாதம் தொடர்ந்து பிரயாணம் செய்து பார்த்தால் அவர்கள் விடும் அறிக்கைகளுக்கும் நடைமுறையில் உள்ள சம்பவங்களுக்கும் இடையேயுள்ள விசித்திர நிலை எந்த லட்சணத்தில் இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்வார்கள். இந்தக் கண்ருவிக் கூத்துக்காக ரயில்வே கட்டணம் வேறு உயர்த்தப்பட்டிருக்கிறது. இது நீதியா நேர்மையா என்பதை ரெயில்வே இலாகா அமைச்சரும் அதிகாரிகளும் சற்று மனிதாபிமானம் வைத்து சிந்தித்துப் பார்த்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். நீண்ட தூரம் செல்லும் பிரயாணிகளுக்கு உடனடியாக செய்ய வேண்டிய வசதி—மேலும் சில மெயில் வண்டிகளை அதுவும் காலை நேரத்தில் விட உடனடி ஏற்பாடு செய்ய வேண்டுவதேயாகும். ஏனெனில் 3-வது வகுப்பில் செல்லுபவர்கள் இடநெரிசலால் ஒருவருக்கொருவர் வண்டியிலே கைகலக்க வேண்டிய வருந்தத்தக்க நிலை வளர்ந்து வருகிறதென்பதை சர்க்காரும் உணர்ந்திருப்பார்களென்று நம்புகிறோம்.

அடுத்தபடியாக சென்னை நகரில் ஓடும் பஸ் சர்வீசைப் பற்றியும் நாம் குறிப்பிட வேண்டியவர்களா யிருக்கிறோம். ரெயில்வே அமைச்சரைப் போலவே சென்னை பஸ் இலாகா மந்திரியும் வாய்ப்பந்தல் போடுவதில் சமர்த்தராகி வருகிறார்!

சென்னை நகரில் டிராம் ஓடுவது நகரின் அழகையும் அதன் நாகரீகத்தையுமே கெடுத்துவிடுகிறது என்பதாக தத்துவார்த்தம் பேசினார் அன்றைய முதலமைச்சர் ஆச்சாரியார் அதற்கு ஒத்து ஊதுவதைப் போல காமராசர் சர்க்கார் டிராம்வே சர்வீசுக்கு மூடுவிழா செய்யப்பட்டதை கைகட்டி வாய்பொத்தி பாாத்துக் கொண்டு நின்றனர்.

டிராம் சர்வீஸ் நடைமுறையிலிருந்தபோதே பஸ்களில் கூட்டம் சமாளிக்க முடியாத நிலையிலிருந்தது. டிராம்கள் ஓடாத இன்றோ சொல்ல வேண்டுவதில்லை. ஏழை நடுத்தர மக்கள் சென்னை நகரில் போக்குவரத்துக்காக பட்டுவரும் தொல்லை இன்றைய ஆட்சியாளர்களின் அனுபவமற்ற தன்மைக்கு சிகரம் அமைப்பது போன்றிருக்கிறது. ஆனால் பஸ் இலாகா அமைச்சர் தோழர் பரமேஸ்வரன் அவர்களோ சென்னை பஸ் பிரயாணிகள் வசதிக்காக சர்க்கார் செய்துள்ள—இனி செய்யப் போகும் அதிவீர பராக்கிரம செய்கைகளை பத்திரிகைகளில் விளம்பு கட்டி அளந்து கொட்டுகிறார்!

வண்ணையிலிருந்து பஸ்ஸில் எழும்பூர் செல்வதாயின் குறைந்தது 2 மணி நேரமாகிறது. அந்தப் பகுதியில் ஓடும் பஸ்களின் எண்ணிக்கை அந்த அளவுக்குத்தானேயிருக்கின்றன, அதுபோலவே ஏழை—நடுத்தர மக்கள்வசிக்கும் பகுதிகளில் பஸ்கள் ஏதோ தருமத்திற்காக ஓட்டுவதைப் போல யிருக்கிறதேயல்லாது பஸ் சர்வீஸ் மூலம் வருவாயைப் பெருக்கவோ அதுபோலவே ஏழை—நடுத்தர மக்களுக்கு நாணயமான முறையில் ஆவன செய்யவோ முற்பட்டிருப்பதாகக் கூறுவதற்கில்லை. முதலமைச்சர் காமராசர் அவர்களிலிருந்து மற்ற எல்லா மந்திரிகளும் ஓரிரண்டு மாதங்களுக்கு சென்னை நகரில் பஸ்களிலேயே பிரயாணம் செய்வது என்று திட்டமிட்டு மக்களோடு கலந்து பிரயாணம் செய்து பார்த்தால் பஸ் சர்வீஸ் லட்சணமும் தெற்றென விளங்கும்.

உதாரணமாக சென்னை வால்டாக்ஸ் ரோடில் உள்ள ரீகல் டாக்கீஸ் ஸ்டாண்டில் ..வ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் 20...30 ..ர் கூடிவிடுகின்றனர். இவ்விவரத்தை பே.. ..காவல் புரியும் போலீசார் தெளிவாக அறிவர். அங்கு.. அதிலும் காலை 7 முதல் 11 மணி ..லை 5 முதல் இரவு 9 மணி வரை வரையும் ப.. ..கள் கூட்டம் சொல்லிமுடியும் பிரயாண.. ..ல் தண்டையார்பேட்டையாது. இந்நிலைய.. ..களிலிருந்து புறப்படும் தங்கசாலை ஆகியவை.. ..ட்டம் நிரம்பிவிட் பஸ்களில் அங்கேயே .. ..தரு ஸ்டாண்டு டால் ரீகல்—திருப்பள்ளி .. ..திலே ஆகிய இடங்களில் பஸ்கள் .. இதை பஸ் இலாகா மந்திரி சற்று ம.. நினைத்துப் பார்த்தால் அப்பகுதி பஸ் பி.. யாணிகளின் அவல நிலையைப் புரிந்து கொள்ளலாம். ஆகவே மேலே குறிப்பிட்ட நேரங்களில் சில பஸ்களாவது ரீகல் டாக்கீஸ் ஸ்டாண்டிலிருந்து புறப்பட்டால் ஓரளவு தொல்லை குறையும் என்பதை அமைச்சர் பரமேஸ்வரன் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இதுபோலவே ஏழை—நடுத்தர மக்கள் வசிக்கும் பகுதிகளான சூளை, பெரம்பூர், புரசை, மவுண்ட்ரோட், சிந்தாதரிப்பேட்டை, இராயபுரம், மற்றும் எழும்பூர்—சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷன்களிலும் பஸ் சர்வீஸ் பிரச்னையில் உடனடி கவனத்தைச் செலுத்தி பஸ் பிரயாணிகளின் குறைகளை (பத்திரிகைகளில் அறிக்கைவிடும் வித்தையாலல்லாமல்) நடைமுறையில் ஆவன செய்யுமாறு சென்னை பஸ் இலாகாவினரை வேண்டிக்கொள்கிறோம்.

பஸ் இலாகா அமைச்சர் மாறுவேடம் பூண்டு மயிலை பஸ் ஸ்டாண்டில் நின்று குறைகளை கவனித்ததாகப் பத்திரிகைகளில் முன்பு செய்தி வந்தது. இது உண்மையானால் அந்த அமைச்சர் சற்று அருள் கூர்ந்து (யாருக்கும் தனது மாறுவேட மர்மத்தைக் கூருமல்) நாம் மேலே குறிப்பிட்ட பகுதிகளில் சில நாட்களாவது மாறுவேடத்துடன் பஸ்களில் பிரயாணம் செய்வாரானல் நாம் மேலே கூறப்பட்டுள்ளவைகளின் உண்மையை புரிந்து கொள்ள முடியும்.

எனவே நேரு சர்க்காரின் ரெயில்வே அமைச்சரும் காமராசர் சர்க்காரின் பஸ் இலாகா அமைச்சரும் தங்களது அபார அற்புதங்களைப் பற்றி பத்திரிகைகளில் வாய்ப்பந்தல் போடுவது விடுத்து செயலளவில் குறைந்தபட்ச நன்மைகளையாகிலும் உடன் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

●

நடக்க இருப்பவை

சென்னை—மாதவரம் தி. மு கழகம்

12—6—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு மங்குதுரை தோட்டத்தில் எம், இ பாண்டியன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். அறிஞர் அண்ணு, எ. கே. சாமி, எம். சி. அ. செயராக மா. பொ. வேதாசலம் ஆகியோர் பேசுவர்

அறிஞர் அண்ணு அவர்களிடம் மாநில மாநாட்டிற்காக நிதி அளிக்கப்படும்,

தூத்துக்குடி—வடக்கூர் தி. மு. கழகம்

12—6—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு வ. உ. சி. திடலில் எஸ். ஒய். வெற்றிவேல் தலைமையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவார். அன்று காலை 9 மணிக்குநகர தி. மு. க. விலிருந்து சைகிள் ஊர்வலம் புறப்படும்.

கடலூர் ஓ. டி. தி. மு. கழகம்

12—6—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு பள்ளிவாசல் தெருவில் 2-வது வட்ட தி. மு. க. திறப்பு விழா தோழர் எ கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள் கொடி ஏற்றி வைப்பார். தோழர் என். வி நடராசன் அவர்கள் கழகத்தை திறந்துவைத்துப் பேசுவார்.

மேட்டூர்அணை தி. மு. கழகம்

13—6—55 திங்கள் மாலை 6-30 மணிக்கு பொதுஜன சேவா சங்க மைதானத்தில் தோழர் அ. பாலு தலைமையில் தோழியர் அருண்மொழி பி. ஓ. எல், தோழர் சு. கு. சின்னசாமி ஆகியோர் பேசுவா.

சென்னை—கொடுங்கையூர் தி. மு கழகம்

14-6—55 செவ்வாய் மாலை 6 மணிக்கு சென்னை கொடுங்கையூர் வட்ட தி. மு. கழக சார்பில் மூலக்கடை ஏரி மைதானத்தில் வெ. இராகவன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி சிற்றரசு, என். வி நடராசன் மு. கிருட்டிணமூர்த்தி ஆகியோர் பேசுவர். இசை முரசு நாகூர் அனீபா இயக்கப் பாடல்கள் பாடுவார்.

அரியநாச்சிபாளையம் (கணியூர்)

இளைஞர் அறிவக 2-வதுஆண்டுவிழா 17-6-55 வெள்ளி மாலை தோழர் அ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் தில்லை—வில்லாளன் கே. ஏ. கிருஷ்ணசாமி ஆகியோர் பேசுவர்.

பேராசிரியர் பேசுகிறார்.

கடவுளைக் கண்டதாகக் கூறுபவன் ஓர் உயர்தர ஏமாற்றுக்காரன்.

11

பகுத்தறிவு வளர்ச்சிக்கான கழகங்கள் ஏன் என்று கேட்கக் கூடத் தமிழகத்தில் ஆட்கள் உண்டு. பகுத்தறிவுப் பிரச்சாரங்கள் அனைத்தும் போலிப் பிரச்சாரங்கள் என்று எண்ணும் மக்கள் கூட்டமும் தமிழகத்தில் நிறைய உண்டு! பகுத்தறிவு வளர்ந்தால் ஆலய வழிபாடு அழிந்துபடும்; ஆண்டவ ஆராதனைகள் குன்றிவிடுமென்றெல்லாம் கணக்கிடும் வைதீகர்கள் இப்படிப்பட்ட பகுத்தறிவுக் கழகங்களையும் கொள்கைகளையும் எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்றும் திட்டம் தீட்ட முற்படுகிறார்கள். இப்போதுதான் ஆண்டவ பக்தர்களின் நிலைமையைக் கண்டு மிகவும் பரிதாபப்படுகிறேன். ஆண்டவன் வளர்ந்தது எப்படி? இறைவழிபாடு ஏன் வளர்ந்தது? ஆலய விழாக்களை யார் எப்படி நடத்துகிறார்கள்? என்ற உண்மைகளை உணர்ந்த மக்கள் இப்படிப்பட்ட பகுத்தறிவு எண்ணங்களை ஏசவும் மாட்டார்கள்; குறை உண்டு என்று இயம்பவும் மாட்டார்கள்.

மனிதன் உலகியலை உணர்ந்து கொள்ள உறுதுணை செய்வது பகுத்தறிவு ஒன்றே என்ற உண்மையை யாரும் மறுப்பதில்லை. பகுத்தறிவால் தான் மனிதன் எதனையும் உணரும் வாய்ப்பினைப் பெறுகிறான். மனிதன் உலகுக்கு அப்பாற்பட்டவற்றை காணவும் இயலாது, உலகிலும் இயற்கையாகக் காணும் காட்சிகளுக்கு அப்பாற்பட்டவற்றைக் காணவும் இயலாது. இது இங்கர்சாலின் தத்துவ உண்மை: Beyond the universe, there is nothing and within the universe supernatural cannot and does not exist.

நாம் நினைக்கும் பொருள்களும் எண்ணும் எண்ணங்களும் உலகியல் பொருள்களும் எண்ணங்களுமேயாகும். உலகில் காண இயலாத பொருள்களைக் கற்பனை செய்ய இயலுமா? உலகில் இல்லாத பொருள்களைத்தான் ஓவியமாகத் தீட்ட முடியுமா? கண்ட பொருள்களினின்றே கற்பனை பெருகுகிறது. காணாதனவற்றை மனிதன் கற்பனை செய்யவும் இயலாது. சான்றாக; பறக்கும் குதிரையை மனிதன் கற்பனை செய்வதாக வைத்துக் கொள்ளுவோம். குதிரை உலகில் காணக் கூடிய ஒன்று அதற்கு ஒட்டிவைக்கும் இறக்கைகளும் உலகியல் பொருள்கள் தான். அது வானத்தில் பறக்கும் காட்சி, குதிரை நீரில் நீந்துவதைப் போன்றோ, அன்றி சித்திரக் குதிரையை விரைந்து நகர்த்துவது போன்றோ தான் இருக்க இயலும். மனிதனுடைய பகுத்தறிவு கூட உலகியலைக் கண்டு உணரக்கூடிய பண்பைத்தான் பெற்றுள்ளது. எதற்கும் காரண காரியம் (Cause & effcet) உண்டு. காரண காரியத்தை உணர்ந்து கொண்டுதான் உலகியல் உண்மையைப் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ள இயலும். இப்படி இருக்கும்போது பகுத்தறிவுக்கும் எட்டாத ஒன்றை மனிதன் கற்பனை செய்து கொண்டு இதுதான் இறைவன் என்று சொல்லி ஆலயத்தில் வைத்துக் கொண்டால் எங்ஙனம் ஏற்றுக் கொள்வது! பகுத்தறிவுக்கும் எட்டாத ஒன்றை சாதாரணமான மனிதன் எப்படி உணர்ந்து கொள்ள இயலும்! இதற்காக ஆலயவழிபாட்டுச் சட்டம் இயற்றிப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவது எப்படி நேர்மை உடையது என்று சொல்ல முடியும்!

நாத்திகர்கள் கடவுள் இல்லை என்று சொல்லும் போதெல்லாம் ஆத்திகர்கள் தகுந்த சமாதானம் கூறத் தலைப்படுவதுண்டு மனிதன் உலகத்தை மட்டும் தான் உணரவும் சிந்திக்கவும் இயலும். கடவுளோ உலகுக்கு அப்பாற்பட்டவன். எனவே மனிதனுக்குக் கடவுள் புலப்படுவதில்லை. இங்ஙனம் புலப்படாத ஒன்றை நாத்திகர்கள் இல்லையென்று சொல்லுவது தக்கதன்று என்று ஆத்திகர்கள் சமாதானம் கூறுவது உண்டு. பகுத்தறிவாளர்களுக்குக் கடவுள் எட்டாது என்ற உண்மையை ஆத்திகவாதிகளே ஒத்துக் கொள்ளுகிறார்கள். கடவுள் நெறியைப் பற்றிப் பேசும் ஆத்திகர்களும் பகுத்தறிவாளர்கள்தானே. அவர்கள் மனமும் உலகத்தைத்தானே சிந்திக்கவும் உணரவும் இயலும். இப்படி இருக்க இவர்கள் மட்டும் கடவுளைக் கண்டு உணர்ந்ததாகப் பிதற்றுவது ஏன்? குறிப்பிட்ட மனிதர்களுக்கு மட்டும் கடவுள் தரிசனம் காட்டுவாரா? அப்படிக் காட்டினால் கடவுளே ஓரவஞ்சனை படைத்தவனாகவன்றோ மாறிவிடுகிறான் கடவுள் ஓரவஞ்சனை எண்ணம் கொண்டவரானால் உலகில் உண்மை இயங்குவதெங்ஙனம்? நாத்திகர்களுக்கு உள்ளதும் மனம்தான்; ஆத்திகர்களுக்கு உள்ளதும் மனம்தான். நாத்திகமனமானாலும் சரி, ஆத்திக மனமானாலும் சரி, காரண காரியம் உணர்ந்து சிந்திக்கக் கூடியதேயாகும். அந்த இருவகையான உள்ளங்களும் உலகத்தையன்றி உலகுக்கு அப்பாற்பட்ட உண்மைகளை உணர இயலாத மனங்கள்தான்.

கற்பனை செய்வதானாலும் சரி, புனைந்துரைகள் தீட்டுவதானாலும் சரி உள்ளம் எண்ணக் கூடியவற்றையே அடிப்படையாகக் கொண்டுதான் இவற்றை செய்ய முடியும், மனதின் அடிப்படையில் எத்தனையோ எண்ணங்கள் எழுகின்றன; எத்தனையோ எண்ணங்கள் மறைகின்றன. ஒருசமயம் உண்மை என்று எண்ணிய எண்ணத்தைத்தான் அந்த மனம் கொஞ்ச நாட்களானதும் பொய்யானது என்று எண்ணச் செய்கிறது. சமயமானாலும், சீர்திருத்தமானாலும், தெய்வீகமானாலும், உலகவாழ்க்கையானாலும் மனதின் அடிப்படையில் தான் பிறக்கின்றன. சில மனங்கள் கடவுள் உண்டு என்பதை எண்ணுகின்றன. சில மனங்களுக்கு கடவுள் எட்டுவதில்லை. சிலர் கடவுள் கொள்கை மீது அசைக்க முடியாத நம்பிக்கையோடு இருந்து ஆண்டவ பாதத்தையே எண்ணி எண்ணி உருகிகிறார்கள். சிலருக்கு ஆண்டவனைப்பற்றிய கவலைகூட இல்லை. ஏன் இந்த வேறுபாடு மனிதரிடையே தோன்றியுள்ளது!

கடவுள் உண்டு என்று எண்ணக் கூடியவர்கள் உண்மையாகவே கடவுளைக் கண்டபின் அல்ல அந்த முடிவுக்கு வந்தது. மனித உலகில் யாருமே கடவுளைக் கண்டதுமில்லை; கடவுளைக் கண்டதாக உண்மையோடு கூறியதுமில்லை. அப்படியாரேனும் கடவுளைக் கண்டதாகக் கூறுவராயின் உண்மையாகவே அவர் ஓர் ஏமாற்றுவித்தைக்காரனாகவே இருக்க வேண்டும்.

கடவுளைக் காணாத போதும் அதனை நேரில் கண்டு தெளிந்ததைப்போல் பிதற்றி அலைவதேன்! இவர்களெல்லாம் பைத்தியம் பிடித்தவர்களா! இவர்கள் போக்கு சரியா? என்று கேட்டு உணரக் கூடிய காலமிது! ஒவ்வொருவன் உள்ளத்தின் அடிப்படையாகத்தான் உள்ளம் பிறக்கிறது. எல்லாருடைய மனமுமே அசைக்க முடியாத உறுதியான மனம் அல்ல. உறுதியான மனவலிமை ஒரு சிலருக்குத்தான் அமைகிறது, மனவலிமை உடையவர்கள் எதற்கும் அஞ்சுவதில்லை எடுத்த காரியத்தை மலை போல் எதிர்ப்பு வந்தாலும் சிறிதும் தயங்காது நிறைவேற்றும் மனவலிமை படைத்தவர்கள் தான் அவர்கள். உலகில் மனிதன் இயங்கும்போது எத்தனையோ தொல்லைகளை அனுபவிக்க நேரிடும். தொல்லைகளின் பாரம் மிகவும் கடுமையாக இருக்கும்போது மனிதன் அளவு கடந்த துயரத்திற்குள்ளாக நேரிடும். கானகத்திடையே சென்று கொண்டிருந்த ஒருவனைப் புலி துரத்துவதாக வைத்துக் கொள்ளுவோம். புலிக்குப் பயந்து ஓடும் அவன் ஒருபாழ் அடைந்துபோன கிணற்றினுள் குதிக்க திட்டமிடுகிறான். ஆனால் கிணற்றினுள்ளோ கருநாகம் ஒன்று இவன் வரவைக் காத்து நிற்கிறது. இப்போது தனிமையில் சிக்கிய இந்த மனிதனின் மனம் படாத பாடுபட ஆரம்பிக்கிறது. எங்கு சென்றாலும் உயிருக்கு ஆபத்தான நிலைமையில் உள்ளது.

காட்டிலேயே நின்று கொண்டிருந்தால் புலிகொன்றுவிடும். கிணற்றினுள் குதித்தாலோ, கருநாகம் உயிரை வாங்கிவிடும், இப்படிப்பட்ட மனித உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டுதான் கடவுளின் தன்மையைப்பற்றி உணர்த்த தலைப்படுகிறேன் உண்மையாக இந்த இருகருள் சிக்கிய மனிதனின் இதயம் உறுதியும் உணர்ச்சியும் மிக்கதாக இருந்தால் ஒன்று புலியையோ, அன்றி கருநாகத்தையோ எதிர்த்துத் தாக்க முற்படுவான். அதனால் உயிரையே இழக்க நேரிட்டாலும் அஞ்சமாட்டான். இதைத்தான் உறுதியான மனம் படைத்த மனிதன் செய்ய முற்படுவான். அவன் புலியோடோ, அன்றி நாகத்தோடோ போரிட்டுத்தான் தீர வேண்டும் என்று துணிந்து விட்டால், தன்னைக் கூட மறந்துவிடுவான்; தான் வந்த காரியம் அவன் மனதிற்கு எட்டுவதில்லை; எப்படிப் போரிடுவது என்ற போராட்ட விதிமுறைகளையும் எண்ண மாட்டான். இயன்றவழிகளையெல்லாம் கையாண்டு எதிர்க்கும் விலங்கினைத் தாக்குவான். இறுதியில் வெற்றி பெற்றால் பெரு மகிழ்வுடன் திரும்புவான். தோல்வியுற்று மரண மெய்தினாலும் மனிதனாக இருந்து மனிதனாகவே இறந்தான் என்ற பெரும் புகழையும் அவன் எய்தலியலும்.

அப்படியில்லாமல், இந்த ஆபத்தில் சிக்கிய மனிதன் பயந்த உள்ளம்படைத்தவனாக இருந்தால் ஏற்படும் நிலையைத் தான் நாம் உணரவேண்டும். உள்ள உறுதி இல்லாதவனாக இருந்தால், புலியையோ, நாகத்தையோ தாக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பிறப்பித்துக் கொள்ளமாட்டான். புலி தன்னை நெருங்குதற்குள் பலமுறை உயிரோடு இருந்தும் இறந்து பிழைத்துவிடுவான். சாகப்போகிறோமே என்று மனம் மிகவும் சஞ்சலப்படும். வாழ்க்கை முடிந்ததா என்று எண்ணி விம்மி விம்மி அழுவான், கடவுள் என்றெல்லாம் வேதாந்திகள் பேசுவது அவன் நினைவுக்கு வரும் ஆயிரம் முறை கடவுளை வேண்டுவான். அஞ்சி அஞ்சி சாகும் அவன்மனக் கண்முன் ஆயிரக்கணக்கான ஆண்டவர்கள் தோன்றுவார்கள், கடவுளை நினைந்து உருகுவான். இங்கே தான் உயர்ந்த உண்மையை உணர வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. உள்ள உறுதி இல்லாதவன் மனதில் தாங்க முடியாத துயரம் தோன்றும் போது மட்டும் தானே, கடவுள் தோன்றுகிறது. அதே மனிதன் இன்பமாக இருக்கும்போது கடவுளை எண்ணி நினைந்துருகுவதில்லையே! ஏன் இந்த நிலைமை! கடவுள் ஏன் துயரக் கட்டத்தில் மட்டும் மக்களால் அழைக்கப்பட வேண்டும்?

கடவுளை எண்ணி எண்ணி ஏமாந்து ஏமாந்துபோன மக்களே! இது உண்மையை உணரக் கூடிய காலம்! உள்ள உறுதி குலையும்போது தோன்றும் கடவுள் அல்ல. ஆபத்தினின்று தப்பிக்க நீ கற்பனை செய்து கொள்ளும் பாத்திரம்தான் அது. இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி அதன்மீது நம்பிக்கை கொண்டு மூடத்தனமாக சமுதாயத்திற்கு கேடு செய்கிறாய், இதனை நீ உணர்ந்து கொண்டு மூடத்தனமாக சமுதாயத்திற்கு கேடு செய்கிறாய் இதனை நீ உணர்ந்து ஒத்துக் கொள்ள இயலாவிட்டால் மற்றோர் சான்று தர விரும்புகிறேன். இரவுக் காலத்தில்

11-ம் பக்கம் பார்க்க

குழந்தை இன்பம்

சா. ராமானுசம், இரட்டணை

சின்னஞ் சிறுகுழவி சிங்கார என்குழவி
உன்னைக் கண்டாலே ஓடிவிடும் துன்பமெலாம்
கன்னம் குழிவிழவே களுக்கென்று நீ சிரித்தால்
அன்னை முகமாகும் அன்றலர்ந்த தாமரையாய்!

தாறும் மாறுய்நீ தத்திநடை பயில்வாய்
வேறும் நினைவின்றி வேடிக்கைப் பார்த்திடுவேன்
சீறும் கோபமெல்லாம் சித்திரமே உனைக்கண்டால்
மாறும் நிலையேனோ மாய்மாலம் அறியேனே

பசியால் நீயழுவாய் பரதவிக்கும் என்னுள்ளம்
கசியும் கண்ணீரின் காரணத்தை உணராது
வசியம் பலசெய்வேன் வற்றாத உன்னமுதை
பசியாத நிலையென்று பின்புநான் உணர்ந்திடுவேன்

கள்ளமற்ற உள்ளத்தை கசடற்ற உன்முகமும்
துள்ளுகின்ற இளமை துடிதுடிக்கும் உன்கரமும்
அள்ளிவந்து கொட்டி அழகையெலாம் கூட்டி
தள்ளிவந்து காட்டி தனிச்சிறப்பு பெற்றிடுமே

பௌத்தம்

இற்றைக்குச் சுமார் 2500 வருடங்களுக்கு முன்பு புத்த பிரான், புத்தகயாவில், போதி மரத்தடியில், தெளிந்த ஞானத் தெளிவுதான் என்ன?

காரணமின்றேல் விளைவு இல்லை காரணத்தைப் பொருத்திருக்கிறது விளைவும். நற்காரணங்களை யொட்டி நிகழும் நிகழ்ச்சியின் முடிவு நலமுடைத்தா யிருக்கும். தீய காரணங்களால் தீமைதான் விளையும். இதை நமது பழமொழியாலும் தெளியலாம். வினை விதைப்பவன் வினை அறுப்பான். தினை விதைப்பவன் தினை அறுப்பான்.

எண்ணம் நல்லதாய் அமைந்தால் நடத்தையும், செய்கையும் நல்வழியாகும்.

எண்ணங்கெட்டதாயின் நடத்தை கெட்டுவிடும். பழி வந்து சூழும்.

நல்லெண்ணங் கொள்ளுதற்கும், தீயவெண்ணங் களைதற்கும் புத்தர் வகுத்த நெறி யாது?

என்றும், எப்பொழுதும், எங்கும் உண்மை உரைத்திடல்வேண்டும். பொய்யுரை பகல்வதை அறவே ஒழித்திடல் வேண்டும்.

பிற உயிர் எதுவாயிருப்பினும் அன்பாய் நேசித்துக் கொடுமை இழைக்காமலும், கொலை செய்யாமலும் இருந்திடல் வேண்டும். அதோடு புலால் உண்பதையும் ஒழித்திடல் வேண்டும்!

எந்நிலை வந்துற்றபோதிலும் திருடுதல் கூடவே கூடாது. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதாக நினைத்திடல் வேண்டும்!

கண்டிப்பாய் காம இச்சைகளை கட்டுப்படுத்தல் வேண்டும். ஒருக்காலும் பிறர் மனைவியை இச்சித்தல் கூடாது!

போதை தரும் பானங்களை அருந்துதலோ, பொருள்களை உண்ணுதலோ, உறிஞ்சி ஊதுதலோ கூடாது!

இவ்வைம்பெரும் நெறிகளைத் தான் "பஞ்ச சீலங்கள்" எனப் போதித்தார்.

இந்நெறிகளை எப்படி கடைபிடிப்பது? மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினையும் தூயமாய் வைத்துக் கொண்டால் போதும். மனம் தூயதானால் அதிலெழும் எண்ணம் தூய்மை நிறைந்ததாயமையும். அவ்வெண்ணத் தூய்மையிலெழுவதுதான் நல்வாக்கு.. அந்த நல்ல வாக்குப்படி நம் காயத்தை (உடலை)ச் செய்கையில் ஈடுபடுத்தும் போதுதான், நற்செய்கைள் தோன்றி நற்பலன்களடைகிறோம். இப்படி நற்பலன்களடைந்து, இன்னல்கள் போக்கி, இன்ப வாழ்வு வாழவிழைதலே நல் வாழ்க்கையாகும்.

நாம் பிறப்பது எதற்காக? நாமும் நல்வாழ்வு வாழ்ந்து அங்ஙனமே பிறரையும் வாழவிட்டு மறையத்தானே! அதற்கு மேற் கூறிய ஐம்பெரும் நெறிகள் போதாவோ? அதை விடுத்து, அறிவிற்கு எட்டாதனவற்றையெல்லாம் ஆண்டவனென்றும் ஈசனென்றும், விதியென்றும், முன்ஜென்ம வினையென்றும் பின்ஜென்மப்பயன் என்றும் கற்பனைகளை ஏற்றுக் கபோதித் தன்மை கொள்வதா?

விதியை விலக்கவும், முன்ஜென்ம வினையைப் போக்கவும் பின் ஜென்மப் பலனைக் கூட்டவும் — கடவுளிடம் முறையிட— இடையில் தரகர்களை உற்பத்திச் செய்கிறோம், அத் 'தரகர்கள்தான் புரோகிதர்கள்—உயர் ஜாதிக்காரர்கள். அவர்களுக்குத் தாழ்ந்தவர்கள்தான் மற்றவர்கள் என்ற நிலையை நாமே உண்டு பண்ணுகிறோம். புரோகிதர்கள் இத்தகைய வாய்ப்பைத் திறமையுடன் பயன்படுத்திக் கொள்கிறார்கள். உழைப்பின்றி, நாம் கொட்டிக் கொடுப்பதால், கொழுக்கிறார்கள், கொழுத்துப்போய் நமக்கெல்லாம் ஆண்டவன் பெயரால், வேதங்களின் பெயரால், இடுகிறார்கள் கட்டளைமேல் கட்டளையாக! தாழ் பணிந்து மேற்கொள்கிறோம் அக் கட்டளைகளை! விளைவு? கைப்பொருள் இழப்பதோடு அறிவையும் பறிகொடுத்து மௌடீக மக்களாகிறோம்! மரக் கட்டைகளாகிறோம்.

அத்தகைய குருட்டுத்தனமும் மூட நம்பிக்கையும், மௌடீகமும் தானே வேண்டாமென்று கூறினார் புத்தர். அறிவைத் துலக்கச் சொன்னார். பகுத்தறிந்துப் பார்க்கச் சொன்னார். நன்னெறிகளைக் கடைப்பிடிக்கச் சொன்னார். நல்வாழ்வு காணச் சொன்னார். அவரன்றோ பகுத்தறிவுச் சுடர்! எதையும் அவர் கண்மூடித்தனமாக நம்பச் சொல்லவில்லையே! சிந்தித்து முடிவு காணச் சொன்னார்!

ஆனால் மதத்தாசர்கள் சிந்தனைக்கு வேலியிட்டு, ஏன்? எதற்கு? எங்கே? என்று கேட்காமல் அவர்களுரைப்பதை அப்படியே நம்பச் சொன்னார்கள். அதுதான் மதம் என்றார்கள்.

புத்தரது பரந்த கொள்கை எங்கே? மாற்றாரின் சூது மதம் எங்கே?

புத்த நெறியை ஏற்க நாம் செய்யவேண்டுவதென்ன? அபிஷேகமா? லட்சார்ச்சனையா? ஆராதனையா? கும்பாபிஷேகமா? திவசங்கொடுப்பதா? அவையெல்லாம் சௌண்டிகளின் சதித் திட்டங்கள்.

புத்தபோதனை: இல்லாதார்க்கு இட்டு உண்ணுதல், நல்லொழுக்கமுடன் நடத்தல், வீணான ஆசைகளை அகற்றுதல், அறிவொளி வேண்டுதல், பொறுமை கடைப்பிடித்தல், பிறர் நலம் விழைதல், உண்மை உரைத்தல், உண்மை நாடுதல், அன்பு கொண்டாடுதல், உயர்வு தாழ்வின்றி சமமாய் வாழுதல், என்பன போன்றவைகளே. இம்மாதிரியான வழிகளில் ஒருவன் ஒழுகி வாழ்ந்திட்டானானால் அவன் உயர்வாழ்வை யடைந்தவனாவான். மாய்கையிலிருந்து விழித்தெழுந்து, சுயநலத்தை விட்டொழித்து, உண்மை ஒளியைக் காண்பவனுமாவான்.

புத்தபிரான் இப்படியெல்லாம் ஊருக்கு உபதேசம் செய்து விட்டுச் செல்லவில்லை! தாம் உபதேசித்த அத்தனை போதனைகளையும் தாமே மேற் கொண்டு ஒழுகிக் காண்பித்து மறைந்த உத்தமராவார்!

இளவரசராகப் பிறந்த சித்தார்த்தர் முற்றுந்துறந்த ஞான விளக்குப் புத்தராய் மறைந்தார்!

புத்தரைப் பின்பற்றி புத்தரது கொள்கைகளை அவனி முழுதுக்குமாகப் பரப்பிய பெருமை, சிறப்பாக அசோகரையே சாரும்.

இந்தியாவில் தோன்றிய புத்த நெறி நாளடைவில் வெளிநாடுகளுக்குச் சென்று பரவி ஓங்கி நிற்கிறது. மீண்டும் இந்திய துணைக்கண்டத்தில் புத்தர் நெறியைத் தழைக்கவைக்க அறிஞர்களும், தலைவர்களும் பாடுபடுதல் வரவேற்கத்தக்கதன்றோ?

"புத்தப் பித்து"

இலக்கியத்தில் தோற்றவன்.

விக்தர் யூகோவின் கவிதை வரிகள் அவனது நெஞ்சில் புதிய உணர்ச்சிகளை தவழ விட்டன. 'நல்ல கவிதைகளை நானும் எழுதுவேன்' என்ற இலட்சியத்தை மனதிலே தேக்கிக் கொண்டான் அவன்,

எழுதிய கவிதைகளை படித்தான். கனவுகள் நிறைவேறாத ஏமாற்றம்! ஆம், அவனது கவிதையை அவனே வெறுத்தான்! வறுமையின் கொடுமைகள் அவனை சருகாக்கின. நொந்துபோன நினைப்புகளோடு பிரெஞ்சு மண்ணிலே உழன்று கொண்டிருந்தான் அந்த ஆசை மனம் படைத்தவன்......

கல்லூரி வாழ்வு கசந்தது. இலக்கியத்தை விருப்பப் பாடமாகக் கொண்டு தேர்வு எழுதினான். அதிலும் தோல்வி! இத்தனை ஏமாற்றங்களை வாழ்வில் சந்தித்தவன் யார் தெரியுமா?

எமிலி சோலா—பிரெஞ்சு இலக்கியத்தின் புது நிலவு, கல்லறையிலே நீதிகண்ட எழுத்தின் வேந்தனாக இன்று வையம் அவனை போற்றுகிறது!

சிரிப்பு

1

ஒருவர்: ஏனையா? உம்ம மகன் யாருக்கும் அடங்காமே அலையறானே! நீர் பார்த்துகிட்டு சும்மாவா இருக்கிறீர்? எதுனாச்சும் ஒரு வழி பண்ணக் கூடாதோ?

மற்றவர்: என்னை என்ன செய்யச் சொல்றீர்? அவனுக்குக் கலியாணம் இன்னும் கூடிவரமாட்டேங்குதே!

2

பெரியவர்; ஏம்பா? இப்படி ஊர் ஊராய்ப் பிச்சை எடுத்துக்கிட்டு அலையறையே! நீ யாரு? எந்த ஊரு?

சிறுவன்: எம்பேரு பரதேசிங்க எங்கப்பாரு பேரு பிச்சையப்பனுங்க! ஊரு ஆண்டிப்புரமுங்க!

3

நாடகாசிரியர்: ஹே கிளிக் கிளவி மட மாங்காய்!...

மனைவி: உம் திட்டுங்க திட்டுங்க என்னை பார்த்தா உங்களுக்கிப்போ கிழவியாய்த்தான் தோணும்! நான் செய்றது எல்லாம் மடமையாய்த்தான் தெரியும்! (கிளவி—சொல், மடம்—பெண்களுக்குரித்தான அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நான்கிலக்களுள் ஒன்று)

4

குமாஸ்தா: டாக்டர் சார்!...... உடம்பு ரொம்ப பலஹீனமாயிருக்கு வேலை எதுவும் செய்ய முடியல்லே...தூக்கமே வரமாட்டேங்குது!

டாக்டர்: நான் சொல்றதைக் கேளுங்க மிஸ்டர்! பேசாமே 'லீவ்'வைக் 'கான்சல்' பண்ணிட்டு 'ட்யூட்டி'யிலே 'ஜாய்ன்' பண்ணிடுங்க

5

ஒருவர்: உம்ம மகன் காசைக் கரியாக்குகிறான், கரியாக்குகிறான் என்கிறீரே!... அப்படி என்னதான் செய்து விடுகிறான்?

மற்றவர்: வேறே என்ன செய்றான்? கிடைக்கிற காசையெல்லாம் சிகரட் வாங்கிப் புகைச்சுத் தள்றான்!

6

நூலாசிரியர்: 'நிராசை! என்று ஒரு நூல் எழுதியிருக்கிறேன். மனிதன் எதிலும் அளவு மீறி ஆசை கொண்டால் அது நிராசையாகவே முடியும் என்பதை ஆதாரபூர்வமாக அலசி ஆராய்ந்து அதில் ஆணித்தரமாக விளக்கியிருக்கிறேன்!

பிரசுரகர்த்தர்: மன்னிக்கவேணும்! நூல் ஒண்ணும் இப்போ வெளியிட வசதியில்லை.

நூலாசிரியர்: தாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது! எப்படியும் பிரசுரித்து உதவ வேண்டும். மக்களின் நலனுக்காக இதை வெளியிட வேண்டுமென்பதே எனது அளவிலா ஆசை.

—'அமலன்'

தோழர் ஏ. பி. ஷெட்டி அவர்கள்
சென்னை

மருத்துவ இலாகா அமைச்சரே வணக்கம். தாங்கள், சென்னை மாநில நகராண்மைக் கழகங்களின் தலைவர்கள் மாநாட்டில் சொற்பொழிவாற்றுகையில் 'நம் நாட்டில் உள்ளவர்கள் சத்தான உணவைச் சாப்பிடுவதில்லை; அதனால் ஏராளமான குழந்தைகள் உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் அடையாமல் இருக்கின்றன' என்று துக்கப்பட்டிருக்கிறீர்கள்!

அமைச்சரே, சத்தான உணவைச் சாப்பிட மாட்டோம்; சத்தற்ற உணவைத்தான் சாப்பிடுவோம் என்று நம்நாட்டவர்கள். 'சத்யாக்கிரகமா' செய்கின்றனர்? அல்லது சர்க்கார்தான் சத்தான உணவை வாகன் வாகனாக இறக்குமதி செய்து சாப்பிடுங்கள் மக்களே என்று வற்புறுத்தி வருகிறார்களா? என்று கேட்கிறேன்.

சாதாரண உணவுக்கு வழி வகை செய்து கொள்ளக் கூட வேலையில்லாமல் திண்டாடித் திரியும் மக்களின் தொகை நாளுக்கு நாள் உங்கள் ஆட்சியிலே வளர்ந்து வரும்போது மக்கள் சத்தான உணவுக்கு எங்கு போவது? அல்லது குழந்தைகள் உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் எப்படி அடைய முடியும்?

இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநிலசர்க்காரே 'உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும்' அடைய வழியின்றி வடநாட்டு ஆதிக்கத்தின் தயவை எதிர்நோக்கி யிருக்கும்போது சென்னை சர்க்காரின் ஆட்சிமுறைக் குட்பட்ட மக்கள் சத்தான உணவையும் அதன்வாயிலாக மூளைவளர்ச்சியையும் எவ்வாறு அடைய முடியும்?

மற்ற அமைச்சர்கள்தான் கோமாளிப்பேச்சுகளில் காலங்கடத்துவதை தங்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார் களென்றால் முதிர்ந்த அனுபவம் பெற்ற தாங்களும் இந்த வெத்துவேட்டுப் பேச்சுகளில் இறங்கி யிருப்பது கண்டு வருந்துகிறேன்.

எனவே நம்நாட்டு எதிர்காலச் சந்ததியாரானகுழந்தைகள் உடல் வளமும் மூளை வளர்ச்சியும் அடைய வேண்டுமென்ற எண்ணம் தங்களுக்குஉண்மையாகவேயிருக்குமானால், அதற்கு ஆவன செய்ய முதலில், சென்னை மாநில சர்க்கார் சத்தான உணவை (அதாவது உண்மையான சுதந்திரத்தைப் பெற—வடநாட்டு ஆதிக்கப் பிடிப்பிலிருந்து விடுபடுவது) சாப்பிட முற்படுங்கள். அதற்கு ஆன செயல்முறைகளில் ஈடுபடுங்கள். அதன் மூலம்தான் நம்நாட்டு குழந்தைகள் உடல் வளர்ச்சியும்—மூளை வளர்ச்சியும் அடைய முடியுமே யல்லாது, வெறும் வாய்ச் சவடால்களால் இம்மகத்தான பணியைச் செய்துவிட முடியாது என்பதைத் தாங்கள் உணர வேண்டுகிறேன்.

அன்புள்ள, கூத்தரசன்

தோழர், சி. சுப்ரமண்யம் அவர்கள்
சென்னை

நிதி அமைச்சரே, நலம் வேண்டுகிறேன். தாங்கள் உதகைக்குச் சென்றும் உச்சி குளிரவில்லையென பதாகக் கேள்விப்பட்டேன். எனினும் அதை நான் நம்பவில்லை. ஆனால் சென்ற வாரம் கோவையில் ஒரு கூட்டத்தில் தாங்கள் பேசிய பேச்சின் போக்கினைக் கண்டு, யான் கேள்விப்பட்ட செய்தியில் ஓரளவு உண்மையும் தொக்கியிருக்கலாமென்று யூகித்தேன்.

"திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளின் தொண்டினால்தான் நாங்கள் மந்திரிகளாக உயர முடிந்தது என்று அந்த இயக்கங்கள் கூறுகின்றன. ஆனால் உண்மையிலேயே அந்த இயக்கங்களின் பேச்சை நம்பியிருந்தால் நாங்கள் இவ்வளவு உயர்ந்திருக்கமாட்டோம்; பிற்போக்கு வாதிகளாகவேதான் இருந்திருப்போம். எனவே நானோ காமராஜர் அவர்களோ அல்லது மற்றவர்களோ எங்கள் சொந்த முயற்சியினால்—தொண்டினால் தான் இந்த மந்திரி பதவி வகிக்கிறோமே யன்றி இதற்கு திராவிட இயக்கங்கள் காரணமல்ல' என்று கோவைகூட்டத்தில் பேசியிருக்கிறீர்கள்.

இந்த பேச்சுக்களைப் பத்திரிகையில் படித்ததும் எனக்குச் சற்று கோபம்தான் வந்தது. ஆனால் இன்றைய மந்திரிகளின் தரத்தைப்பற்றி உங்கள் கட்சியைச் சார்ந்தவர் மதுரை மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என். ஆர். தியாகராசன் எட்டாலபுரம் அடுத்த மெட்டில் பெறைடி என்ற சிற்றூரில் பேசியிருப்பதைப் படித்தபின் உங்களைப் போன்றவர் பார்ப்பனரல்லாதார் இயக்கப் பணியின் காரணமாகவே அமைச்சர் பதவிகளில் அமர முடிந்தது என்று கூறுவதே அந்த இயக்கத்தின் பெருமையைக் குறைப்பதாகும் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. இதோ பாருங்கள் உங்கள் தோழர் என். ஆர். தியாகராசன் தரும் சர்டிபிகேட்டை!

"இந்தக் காலத்தில் மந்திரியாவது என்பது மிகவும் சுலபமான காரியம். முன்காலத்தில் மந்திரி பதவி வகிப்பதென்பது எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிப்பதைப் போல சிரமமான காரியமாயிருந்தது. அந்த அளவுக்குத் தகுதி வேண்டியிருந்தது. இந்தக் காலத்திலோ நினைத்தால் மந்திரி எங்கு பார்த்தாலும் மந்திரி? நாம் இடறி விழுந்தாலும்மந்திரிகள் மீது தான் விழவேண்டும். அவ்வளவு பெருத்துவிட்டார்கள் மந்திரிகள்! மந்திரியாவதற்கும் புத்திசாலித்தனத்திற்கும் சிறிதும் சம்பந்தமேயில்லை. மந்திரிகள் எல்லோருமே புத்திசாலிகள் என்று கூற முடியாது."

அமைச்சர் சுப்ரமண்யனாரே—பார்த்தீர்களா உங்கள் தோழர் தரும் விளக்கத்தை! தென்னாட்டு மக்களுக்கு—திராவிட இனத்தவருக்கு, சர், தியாகராயர், டாக்டர் நாயர், டாக்டர் நடேசனார், போன்ற மாபெருந் தலைவர்கள் ஆற்றிய மகத்தான தொண்டினைப் பின்பற்றி பெரியார், அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் அவர்களின் தலைமையில் இயங்கிவரும் மகத்தான இயக்கமும் செய்து வரும் தூய்மையான தொண்டின் காரணமாக இன்று திராவிட சமுதாயத்திற்கே ஓர் புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற வரலாற்று உண்மையை மறைத்துப் பேசும் மந்திரி சுப்ரமண்யனாரே உங்களுக்கு மதுரை மாவட்ட காங்கிரஸ் தலைவர் என். ஆர். தியாகராசனின் சர்டிபிகேட்டை பதிலாகக் கொள்ளுமாறு கூறவில்லை யெனினும் இது சமயம் அதனை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

உங்கள் முதுகில் உள்ளதைத் திரும்பிப்பார்த்து திருந்த முயலாமல், பிறர் மீது வசை புராணம் பாடுகிறீரே! பரிதாபம்! பரிதாபம்!

அன்புள்ள, கூத்தரசன்.

பேராசிரியர், என். ஜி. ரங்கா
அவர்கள்.
விஜயவாடா.

முன்னாள் "கிருஷிகர் லோக்" தலைவரே வணக்கம்,' ஆந்திர மாநிலக் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் தாங்கள் போட்டியிட்டுத் தோல்வியடைந்து விட்டீர்களாம்! பரிதாபம்! அதற்காக எனது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. இ. காங்கிரசின் ஆதிக்க வெறியைத் தகர்த்தெறியவே, காங்கிரஸ் கூடாரத்தைவிட்டு வெளியேறுகிறேன் என்று முழக்கமிட்டுதனிக்கட்சியையும் நிறுவி பணியாற்றிய தாங்கள் மீண்டும் அதே ஆதிக்கத்திற்குத் தோள் கொடுக்கும்பணியில் ஈடுபடுவது நேர்மையற்ற செயல் என்பதையே உமது தோல்வி எடுத்துக் காட்டுகிறது.

அ. இ. காங்கிரஸ்தலைவர் நேரு பண்டிதர் போக்கினை வன்மையாகக் கண்டித்துப் பேசி யிருக்கிறீர்கள். அதுபோல தங்களையும் தங்கள் கட்சியினரையும் அ. இ. காங்கிரஸ் மேல்மாடிமுதல் தூண்கள் வரை கண்டபடி பேசின. ஆனால் நீங்களோ திடீரென சரணாகதிப் படலத்தில் இறங்கி "காங்கிரஸ் ஜோதியிலே" இரண்டறக் கலந்து விட்டதாக பிரகடனம் செய்துவிட்டு ஆதிக்கபுரியினரின் துணையை நம்பி ஆந்திரக் காங்கிரஸ் தலைமைப் பீடத்துக்கு போட்டி யிட்டீர்கள். ஆந்திர மக்களோ தங்களின் தேர்தல் வாயிலாக வடநாட்டு ஆதிக்கத்திற்குச் சரியான பாடம் கற்பித்துள்ளனர். இந்தபாடத்திலிருந்து இனியாவது நீங்களும் அரசியலில் சற்று தன்மானத்துடன் நடப்பீர்களென்று நம்புகிறேன்.

அன்புள்ள, கூத்தரசன்

●

புத்தக விமர்சனம்

கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர்

தீட்டியவர் : கௌதமன்

●

உலகிற்கு ஜனநாயகத்தைப் போதித்த கிரேக்க நாட்டின் மாவீரன் அலெக்சாண்டரின் வாழ்க்கையைப் பற்றியது இந்நூல்.

களம் கண்டு கலங்காது, இவ்வுலகையே தன் உள்ளங்கை நெல்லிக்கனிபாக்க அல்லும் பகலும் போர், போர் என அலைந்த ஒரு வீரனது, வாழ்க்கை வரலாற்றை அவன் சந்தித்த போர்க்களங்களை அவன் சூறையாடிய நாடுகளை எல்லாம் வரலாற்று உருவில் எளிய நடையில் வடித்துத் தருகிறார் கௌதமன். இளைஞர்கள் அனைவரும் படித்துப் பக்குவம் பெற வேண்டிய நூல்களில் இதுவும் ஒன்று. விலை ரூபா இரண்டு

கிடைக்குமிடம்: சிந்தனையாளர் பதிப்பகம், 68. அப்பு முதலித் தெரு, சென்னை-4

புறக்கணிக்கப்பட்ட இனம்.

இந்து சரித்திரம் என்றால் இரண்டொரு பக்கத்துடன் திராவிடருக்கு முழுக்கு! மற்ற பக்கங்கள் எல்லாம் ஆரிய மன்னரையும் பிற்காலம் வந்த துருக்கி முகலாய ஆட்சியையும் மிகவும் விரிவாக கிளைவும் டல்ஹௌஸியும், ஆங்கிலேயரும் செய்த சூரச் செயல்களையும் பெருக்கப் பேசும், 'சூரச்செயலா, சுரண்டலா' என்று நினைத்துப் பார்க்கக்கூடத் தோன்றுது. உபாத்தியாயருக்குப் பாடம் ஒப்புவிக்க வேண்டும். இன்றேல் விழும் குட்டும், அடியும், திராவிடர் என்றால் சப்பை மூக்கர், கரியர், அநாகரியர், ஆரிய நாகரிகமே சிறந்தது என்று புத்தகம் சொன்னால் நம்பித்தானே ஆக வேண்டும். தமிழை எப்படி ஆங்கிலம் புறக்கணித்ததோ, அப்படியே **இந்த நிலத்திற்கு உரிய ஆதி மக்களும். ஒப்பற்ற நாகரிகத்தையுடைய வீரருமான திராவிடரையும்,** இந்திய சரித்திரம் புறக்கணித்தது.

—சுத்தானந்த பாரதியார்.

'இதுதான் உலகம்' பக்கம் 97

திருமணங்கள்

விஜயலட்சுமி-ப. வேலாயுதம்

தோழர். ப. வேலாயுதம்—தோழியர். விஜயலட்சுமி திருமணம், மன்னார்குடியில், மணமகள் இல்லத்தில் 1—6—55 காலை 8-மணிக்கு. சிறப்புற நடந்தேறியது. தோழர். ஜி. பாலகிருஷ்ணனுர் மண விழாவிற்குத் தலைமை தாங்கினுர். தி. மு. கழக முன்னுள் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணு, தோழர்கள் ஞானசிகாமணி. கே. என் எஸ். ராசன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்கட்கு வாழ்த்து மடல்களும் பரிசுகளும், வழங்கப்பட்டன. மணமகன் ப. வேலாயுதம், அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறியபின் சிறந்த விருந்து நடைபெற்றது.

பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் தோழர்கள். கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், க. அன்பழகன், இராம. அரங்கண்ணல், ஆர். சவுரிராசன், ஆர், செழியன், எஸ். எஸ். பி. லிங்கம், எஸ். வி. லிங்கம், எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அ. பொன்னம்பலனுர். என். எஸ். இளங்கோ, மன்னை. நாராயணசாமி, கே. ஆர். ஜி. பால், பேராவூரணி அடைக்கலம், திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன், பொன்மலை பராங்குசம், மற்றும், உள்ளூர் பிரமுகர்கள் உறவினர்கள் பெருந் திரளாக வந்திருந்தனர்.

சுலோசனு - ஈ. வெ. கி. செல்வராஜ்

29-5-55-ம் நாள் காலை 9-மணிக்கு ஈரோடில் பெரியார் நகர மன்றத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் தமையனுர் வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மகனும், தோழர். ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் தம்பியுமான ஈ. வெ. கி. செல்வராஜுக்கும், ஆனமலை 'தோழர். நரசிம்மன் அவர்களின் தமையனுர் மகள் செல்வி சுலோசனுவுக்கும் திருமணம் சிறப்புற நடைபெற்றது. திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாச்சலம் அவர்கள் தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்தார்.

மணமக்கள் மலர்மாலைகளைச் சூட்டிக் கொண்டு வாழ்க்கை ஒப்பந்தத்தை வாசித்தனர், பிறகு பெரியார் அவர்கள் மணமக்களைப் பாராட்டி விரிவுரையாற்றினுர். மணமகன் செல்வராஜ் அனைவருக்கும் நன்றி கூறிய பின் விருந்துபசாரமும் இனிது நடைபெற்றது. மணவிழாவிற்கு வந்திருந்த அனைவரையும் தோழர்கள். ஈ. வி. கே. சம்பத், நரசிம்மன் பி, ஏ., ஆகியோர் வரவேற்று உபசரித்தனர். உத்தியோகஸ்தர்களும் பல கட்சிப் பிரமுகர்களும், உறவினர்களும் ஏராளமாக வந்திருந்து சிறப்பித்தனர். மணமக்களுக்கு அன்பளிப்புகளும் வாழ்த்துச் செய்திகளும் வழங்கப்பட்டன.

தையநாயகி - சபாபதி

26-5-55-ம் நாள் காலை 9-மணிக்கு மேல்பட்டாம்பாக்கத்தில் (மணமகன் இல்லத்தில்) நெல்லிக்குப்பம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர் கே: ஆர். சபாபதிக்கும் தோழியர் தையநாயகிக்கும், திருமணம் இனிது நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களைப் பாராட்டி பேசினுர். மற்றும் கடலூர் கே. ஜி. சாமிநாதன், ஆசிரியர் வடிவேல், திருக்குறள் தெளிவுரையாசிரியர் புதுவை சுந்தரேசசண்முகனுர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்

மணமக்களுக்கு பரிசுகளும். வாழ்த்திதழ்களும் கழகத் தோழர்களாலும், உறவினர்களாலும் அளிக்கப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப் பின் மணமகன் நன்றி கூற விருந்துபசாரத்துடன் திருமணம் முடிந்தது.

பெரியசாமி - கண்ணம்மாள்

16-5-55 6-30 மணிக்கு பெங்களூர் ஸ்ரீராமபுரக் கழகத் தோழர் பெரியசாமி

கலை அரங்கம்

'தம்பி'

பெருன்ன தாமஸ் ('விகடகேசரி' என்ற மலையாள இதழில் எழுதிய கட்டுரை இது. இவர் நல்ல கதாசிரியரும் கூட. கலை வையத்தின் புதிய மலர்ச்சியை இயக்கத்தின் சாதனையை வாழ்த்துகிறுர். திராவிடத்தின் பிற்பகுதியிரை நமது கருத்துகள் கொள்ளை கொள்கின்றன, என்பதற்கு இது ஒரு விளக்கம். 'சினிமாக்கழகம்' என்று ஏதேதோ ஏசி இதயத்தை தடவிக்கொள்வோருக்கு இது ஒரு படையல்......

அருகே இருக்கும் முட்டாள்களை விட தூரத்தில் எங்கோ வாழும் புத்திசாலிகள் உண்மையை எத்துனை விரைவில் புரிந்து கொள்கிறுர்கள்......

—சேரன் தம்பி.

'புதிய மெருகு'

முற்போக்கு நினைப்பும் திட்டங்களும் படைத்த அரசியல் கட்சிகளின் புதிய வருகையால் தமிழ் திரையுலகம் கலையின் மெருகை பூரணமாகப் பெற்றது. வங்காளத் திரையுலகை பொலிவாக்க புரட்சி சிந்தை படைத்த ஹேமன் குப்தா வந்தார். திராவிடர் இயக்கத்தின் தனிப்பெரும் தலைவரான அண்ணு அவர்கள் கலையுலகில் புகுந்ததும் திரையின் வசனத்துறையிலே புதியதொரு உணர்ச்சியும், ஆவேசமும் பிறந்தன. திரைப்படங்களில் திராவிடர் இயக்க கருத்துகள் ஒலித்ததால் அந்த இயக்கம் விரைவிலே மக்கள் மன்றத்தின் மதிப்பை பெற்றது என்ற உண்மையை மறுப்பதற்கில்லை!

அறிஞர் அண்ணு பின்னுல் கனலின் வெம்மை படைத்த கருணுநிதி போன்ற புரட்சி இலக்கியகர்த்தாக்கள் அணிவகுத்தனர். நல்லதொரு முற்போக்கு எண்ணம் வாய்ந்த அவர்களின் வசனங்களோடு—ஒத்துழைப்போடு வெளி வந்த திரைச்சித்திரங்கள் மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டன.

வடக்கத்திய ஆதிக்க மறுப்பு கோயிலையும், கடவுளையும் இணைத்து கலாச்சாரத்தை திருடும் மதத்திற்கு நெருப்பிடுவது—சமூகத்தின் வேண்டாத சம்பிரதாயங்களை அழித்தொழிப்பது — திராவிடநாடு அமைப்பு ஆகியவை திராவிடர் இயக்கத்தின் தலையாய இலட்சியங்கள். கொள்கை வெற்றிக்காக அவர்கள் கலையுலகைபயன்படுத்துகின்றனர்.

பிறப்பு

வள்ளுவர் ஆண்டு 1986 வைகாசி திங்கள் 16-ம் நாள் பட்டமங்கலம் தனியரசு அவர்களின் துணைவி சண்முகவள்ளி பெண் மகவு ஒன்றுக்கு தாயானுர்கள். இதன் நினைவாக திராவிடன் இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 வரப் பெற்ருேம், நன்றி—நிர்வாகி

அவர்கட்கும் சு. கண்ணம்மாள் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நிகழ்ந்தது. அவ்வமயம், கி. சோழன், ப. செல்வராசன், ராசகோபால், வி, முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வாழ்த்துக்களும், பரிசுகளும். அளிக்கப்பட்டது. வி, செழியன் நன்றி நவின்ருர். திராவிடன் வளர்ச்சிக்கு ரூ. 1 வரப்பெற்ருேம்.

திரையுலகம் பிரசாரத்திற்கு சிறந்த கருவியல்லவா? வசனங்களிலே இயக்கத்தின் இலட்சியங்கள் அழகாக அடியோட்ட மிடுகின்றன.

அண்ணுதுரை — தமிழகத்து ஏழைகளுக்காக இலக்கியங்களை படைக்கும் மறுமலர்ச்சி எழுத்தாளர். திரைப்பட வசனத் துறையையே முழுக்க முழுக்க மாற்றி மறுகோலம் செய்விக்க அவரால் முடிந்தது.

சமூகக் கொடுமைகளைக் களைந்தெறிந்து, புதிய தோர் உலகு செய்வதே அண்ணுவின் பணி. தொண்டு இலட்சியம் எல்லாம்! **வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, சொர்க்க வாசல்** போன்ற திரைச் சித்திரங்களால் அண்ணுவின் மொழித் தன்மை தெரிந்திருக்கிறது. கலைக் கண்ணுடி வழி, செல்வச் செருக்கையும், அதன் முன்னே எரிந்து சாம்பலாகும் வாழ்வின் உண்மைகளையும் இத்தனை துணிவோடு, திறமையோடு விமர்சனம் செய்த எழுத்தாளர்கள் இவர் போல எவருமில்லை!

கடவுளைக் காட்டி மக்களை வதைக்கும் மடாதிபதிகளை அந்தக் கொடுமை பிம்பங்களுக்கு சாமரம் வீசும் மன்னுதி மன்னர்களை **'சொர்க்க வாசலில்'** அண்ணு காட்சியாக்கினுர். அண்ணுவின் எழுத்தால் மெருகேறிய எல்லா திரைப்படங்களுக்கும் மக்கள் அமோக ஆதரவை அள்ளித்தருகிறுர்கள்..

அரசியலில் பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளை அழித்தொழிக்க கருணுநிதி தமது எழுத்தால் பணிபுரிகிறுர். **'பராசக்தி'** ஒன்றே போதும் இந்த உண்மையை தெளிவாக்க. 'பராசக்தி' வசனங்கள் தமிழ் திரையுலகில் எவரும் நினைத்திராத பெரும் மாறுதல்களை சிருஷ்டித்தன. வசனங்களின் 'விமர்சனத் தன்மை'யை மக்கள் ஆரவாரத்தோடு வாழ்த்தி வரவேற்றனர்! வழக்கு மன்றம், பொருளாதார நிலை, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழும் நம்பிக்கைகள், ஆகிய எல்லா கொடுமைகளையும் இல்லா தொழிக்க கருணுநிதியின் எழுத்தாற்றல் கேட்போரைத் தூண்டுகிறது. குணசேகரன், கல்யாணி, விமலா போன்ற பாத்திரங்களின் வாயிலாக வரும் சொற்களில் புதுமை மணக்கிறது. புதிய நினைப்பின் முரசொலி எங்கும் ஒலிக்கச் செய்வன அவரது எழுத்துக்கள். **'மனோகரா'** **'அம்மையப்பன்'** ஆகியவை கருணுநிதியின் புகழ் பேசும் வெற்றி விளம்புகள்......

இன்றைய தமிழ் திரைப்படத் துறை புதிய அழகோடு வளர்கிறது; மூடநம்பிக்கைகளையும், அர்த்தமற்ற சம்பிரதாயங்களையும் அழிக்க மக்களின் நெஞ்சிலே துணிவைத் தேக்க அவை பவனி வருகின்றன. திராவிடர் இயக்கம் இதற்கு தலைமை தாங்கி பணிபுரிகிறது அவர்களின் நல்லெண்ணம் வாழ்த்தத்தக்குரியது!

மலாட் தமிழர் முன்னேற்றச் சங்கம் முதலாண்டு விழா

மலாட் தமிழர் முன்னேற்றச் சங்க முதலாண்டு விழா மே மாதம் 24-ந் தேதி மாலை 6-30 மணிக்கு பட்டானிசால் காருவாலா கம்பவுண்ட் திறந்த வெளி மேடையில் நடைபெற்றது தாருவி தாலூகா காங்கிரஸ் கமிட்டி. தலைவர் திரு. எம். துரைசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

கௌரவ செயலாளர் திரு. எஸ் பி. பிலிப் சாமுவேல் அவர்கள் வரவேற்புரையாற்றினுர்கள்.

பின்னர் திருவாளர்களான உ. மு. முகமதி ஹுசைன், மீ. அ. சி. சந்திரசேகர பாவலர் கே. எம். பீர்முகம்மது. எம். எ. நடராசன், ந. சிவபாண்டியன் ஆகியோர்கள் தமிழர் பண்பாடுகள் குறித்துப் பேசினுர்கள்.

பின்னர் திரு. வி. திருநாவுக்கரசு, துரைசாமி ஆகியோரின் சிறந்த இளைஞரின் சமிபாஷை நடைபெற்றது.

பிறகு குமரி விமலா கமலா நாட்டியமும் சுனியா குழுவினரின் இன்னிசை பாட்டுக் கச்சேரியும் நடைபெற்றது,

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

18

காமத்துப்பால்

தமிழ் இலக்கியங்களில் காமத்துப் பால்—இன்பம் பற்றி கூறும்போது, உடற் சேர்க்கை விதங்களை விவரிப்பதில்லை. உள்ளப்புணர்ச்சி ஒன்றையே காமத்துப்பாலில் எங்கும் காணலாம்.

உடற்புணர்ச்சி என்பது 'இடக்கரடக்கல்' என்கிற விதிப்படி, வெளியில் கூறத் தகாதது—தேவையில்லாதது என்ற காரணத்தால் எவரும்—எங்கும் கூறவில்லை.

உடற்புணர்ச்சியால் உள்ளத்தில் நிகழும் இன்ப உணர்ச்சிகளையே இடக்கரடக்கல் என்னும் நன்மரபு கெடாதவாறு தமிழர்கள் காமத்துப்பாலை வகுத்தனர்.

''பாலொடு தேன்கலந்தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர்''

என்னும் திருக்குறள் இதற்குப் போதிய சான்றாகும், இதன் பொருள் :

குளிர்ந்த மொழியாளின் ஒளிமிக்க பற்களிடையே ஊறிய நீர் பாலொடு தேனும் கலந்ததுபோல் சுவை மிக்கது என்பதாம்.

இதற்குமேல் வெளிப்படையாக தமிழ் இலக்கியங்களில் உடற்புணர்ச்சி விவரங்களைக் காண முடியாது. காமம் உள்ளத்தில் நிகழ்வதாகையால் அதனைத் தமிழர்கள் 'அக ஒழுக்கம்' என்றனர் வெளி நிகழ்ச்சிகளைப் 'புறஒழுக்கம்' என்றனர். இந்த ஒழுக்கங்கள் தமிழுக்கே உரியன.

வடமொழி இலக்கியங்களில் உடற் சேர்க்கை பற்றி மிக விரிவாகக் கூறுவது தான் 'காம நூல்' என்று சொல்லப்படுகிறது;

அவற்றில், உடற்சேர்க்கை 64 விதங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அதனையே 64 லீலைகள் என்றும் கூறுவர்!

உடற்சேர்க்கை என்று இங்கு நாம் குறிப்பிடுவது கலவியை மட்டுமல்ல. வட நூற்களிலும் அவ்வாறு கூறவில்லை. 64 லீலைகள் என்பவை அத்தனையும் தனித்த கலவி முறை அல்ல' அவைகள் :—

ஆலிங்கனம்	5	வகை
அதரபானம்	11	,,
அமுதநிலை	16	,,
நகக்குறி	8	,,
பற்குறி	8	,,
குரல்	8	,,
தாடனம்	8	,,
ஆக ...	64	

இந்த 64 வகை இன்ப விளையாட்டுகளின் ஒரு பகுதியாகவே கலவி விதங்களையும் சேர்த்திருக்கின்றனர். தனித்த கலவி முறைகள் ஐந்து அல்லது ஆறுவிதங்களாகும்.

இவைகளை, கந்தபுராணம் இந்திரபுரிப் படலத்திலும், பார்க்கவ புராணம் இந்திரன் சாபம் பெற்ற படலத்திலும், விரிவாகக் கூறி இருப்பதோடு, பின்னும் சில ஏடுகளிலும் ஆங்காங்கு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இந்தப் புராணங்களில் காணப்படும் கருத்துக்களுக்கு 'கம்பரசம்' உறைபோடக் கூட முடியாதென்பதை எவரும் ஒப்புக் கொண்டே தீரவேண்டும்!

இந்த 64 லீலைகளையும் ஆதியோடந்தமாக விளக்கிக் கூறுவது 'கொக்கோகம்' என்கிற மதனகாம நூலாம்!

இந்த 64 லீலைகளிலும் மிகச் சிலவே நாகரிக மக்களால் ஒப்புக் கொள்ளத்தக்கவை. பெரும்பாலான லீலைகள் மிருகங்களை விட தாழ்ந்த செயலில் ஈடுபடச் செய்வதாகும். அதைப்பற்றி விரிவாக எழுத நமது மனமும் கையும் ஒருங்கே கூசுகின்றன. அப்படி எழுதினாலும் 'திராவிடன்' இதழில் இடம் பெறாது என்பதை நாமறிவோம்.

வடவர் காமநூலில் வரும் இழிசெயல்கள் பலவற்றிற்கும் தலைமையாக விளங்குவது அதரபான வகை பதினொன்றில் சிலவேயாம். அவற்றை பிற்காலத் தமிழ் மன்னர்களில் ஒருவனும், வடநூலிலும் தமிழிலும், பெரும் புலவனுமான அதிவீரராமபாண்டியன் என்பான், கொக்கோகம் என்னும் பேரால் தமிழ்ப்பாக்களாக மொழி பெயர்த்திருக்கிறான்.

அப்பாடல்கள் அனைத்தும் வடநூலில் இருந்து பெயர்க்கப் பட்டவைதானா? இத்தனை இழிதன்மை வாய்ந்ததா வடவரின் காமநூல்? என்றெல்லாம் எண்ணும்படி அவற்றின் கருத்துக்கள் இருக்கின்றன.

அப்படி எண்ணுவோருக்கும் அதிவீர ராமபாண்டியன் தந்துள்ள விளக்கத்தை மட்டுமே இங்கே விரிக்கின்றேன். அது வருமாறு :—

எல்லா உலகும் படைத்தவிதி
இயற்றும் தருமம் பொருளின்பம்
வல்லார் உணரச் செய்தவற்றுள்
மற்றை இரண்டும் பிறர்செய்தார்
நல்லார் புகழும் நந்திஇன்ப
நலமென் றெடுத்த ஆகமத்தை
சொல்லா ரியத்தில் ஈரைஞ்ஞூ
றத்தியாயம் பெறச் சொன்னான்

இதன் பொருள் : உலகமெல்லாம் படைத்த பிரமன், யாவரும் விரும்பிச் செய்யும் அறம், பொருள், இன்பம் என்கிற மக்கள் அடையும் பயன் மூன்றையும் வல்லோர் உணருமாறு அருளினான். அவற்றுள், அறத்துக்கும் பொருளுக்கும் உரிய நூல்களை மனு முதலியவர்கள் செய்தார்கள். அறிவுடையோரால் துதிக்கப்படும் நந்திகேசுரன் என்பான் இன்ப நலம் என்று அதனையே பொருளாகக் கூறுகின்ற காமநூலை வடமொழியில் ஆயிரம் அத்தியாயமாகச் சொன்னான் என்பதாம்.

பின்னர் அதனை முறைமுறையே
சுருக்கி உரைத்தபெரியோர்கள்
மன்னு சுவேத கேதுவொடு
மருவு தவத்துப் பாஞ்சாலன்
சொன்ன அதனை எழுவகையாத்
தொகுத்தார் எழுவர் அதைத்திரட்டிப்
பன்னி உரைத்தான் பெருந்தவத்துப்
பழிப்பில் வாத்சாயன் பகவான

இதன் பொருள் : பின்பு சில பெரியோர்கள், அதனை முறையாக சுருக்கிச் செய்தார்கள். அவர்களில், சுவேதகேது என்பானும் தவத்தையுடைய பாஞ்சாலனும், தொகுத்துச் சொன்னவராவார். அதன்பிறகு, அவைகளை சப்த ரிஷிகள் எழுவகையாகச் சுருக்கினார்கள். அந்த ஏழையும் வாத்சாயன் பகவான் ஒன்றாகத் திரட்டிக் கூறினான்.

இவர்கள் முதல்நாள் உரைத்தவெலாம்
எவர்க்கும் விளங்கா இதுவிளங்க
உவரி உலகத் துரைத்திடன
வைண தத்தன் உரைத்திடவும்
கவிஞர் உரைக்கும் கொக்கோகன்
என்னும் வடநூற் கவிராயன்
அவனி முழுதும் நிலைநிற்க
அவன்கா மத்தை வகுத்துரைத்தான்

இதன் பொருள் : இவர்கள் பூர்வத்தில் சொல்லிய நூல்கள் எவருக்குமே விளங்காது. ஆதலால் வாத்சாயன்பகவான் செய்த இந்த நூலை, கடல் சூழ்ந்த உலகத்தில் யாவருக்கும் விளங்கும்படி வைணதத்தன் சொன்னான். பின்பு கவிஞரால் புகழப்படும் கொக்கோகன் என்னும் வடநூற்கவிராயன் அக்காம நூலை வடமொழியில் சுருக்கமாக்கி உலக முழுதும் நிலை நிற்கும்படி விவரித்து உரைத்தான்.

இப்படியே நூல் வரலாறு கூறிவந்த அதிவீரராமபாண்டியனுக்கு ஒரு சந்தேகம் தோன்றி விட்டது. அது என்னவெனில்; வடமொழி நூல்களை ஆராயாமலே, வடவர்களை, உயர்ந்தவர்கள்—சிறந்தவர்கள்—என்றெல்லாம் கருதிக் கொண்டிருக்கும் எவராவது அந் நூலில்வரும் ஆபாசச் செயல்களை நம்ப முடியாமல் தன்னுடைய 'புனைந்துரை' என்று கருதினால் என்ன செய்வது? என்பதுதான் அந்த சந்தேகம். உடனே, அதற்கும் விளக்கம் தருகிறார் வருமாறு :—

பண்டு வாத்சா யன்பகவான்
பழைய முனிவர் கொக்கோகன்
கண்டா ரியத்தில் குறித்துரைத்த
கலைஞானத்தைத் தமிழ் வல்லோர்
கொண்டா தரிக்க இயற்றமிழால்
கூறி விட்டோம் தொன்மையதாய்
உண்டாம் பொருளே உரைத்ததல்லால்
புதிதாய் ஒன்றும் உரைத்திலமால்

இதன் பொருள் : முற்காலத்தில் வாத்சாயன் பகவான், பழைய முனிவர்கள், கொக்கோகன் முதலாயினோர் கண்டறிந்து வடமொழியில் சுருக்கிச் சொல்லிய காம நூலை, தமிழ் வல்லோரும் கண்டறிந்து ஆதரிக்குமாறு இயல் தமிழினால் முதல் நூலாகிய கொக்கோகத்திலுள்ள பொருளை உரைத்தோமே தவிர, புதிதாக—நாமாக ஒன்றும் சொல்லவில்லை என்பதாம்.

இதுவரை கூறிவந்த வடவரின் காம இலக்கியங்கள் மிகச் சிலவே. என்றாலும், அவைகளில் நம்பக்கூடாத அளவுக்கு ஆபாசங்கள் மலிந்திருப்பதைக் காணலாம்

இதனை நம்பமுடியாதவர்கள், இதனை ஆதாரமாக் கொண்டு கோவில்களிலும் தேர்களிலும் செதுக்கியுள்ள சிற்பங்களைக் கண்டாவது உள்ளம் தெளிவாராக.

அதிலும் தெளிவு பெறாதவர்கள், விநாயகர் புராணம் சண்முகர் அனுஷ்டித்த படலத்தையும், காஞ்சிப் புராணம் சுரகரிசப் படலத்தையும் படித்தாராய்ந்து அறிவு பெறுவாராக.

இத்தகைய காம நூலை தனதாகக் கொண்ட வடவரின் அக ஒழுக்கம் எப்படி இருக்கும் என்று கூறத் தேவையில்லை. இந்த ஒழுக்கத்தை பைத்தியம் பிடித்த திராவிடன் கூட தனது என்று ஒப்புக் கொள்ள மாட்டான்.

இதுவரையிலும் வடமொழியாளரின் இலக்கியங்களுக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் உள்ள வேறுபாடுகளில், தமிழருக்கும் ஆரியருக்கும் பொதுவான பண்புகளை நீக்கி சிறப்பாக இருக்கும் வித்தியாசங்களை ஆராய்ந்தோம்.

இதிலிருந்து இருவகை இலக்கியங்களும் பெரிதும் முரண்பட்ட சிறப்பியல் கொண்டவை என்பது எவருக்கும் நன்கு விளங்கும்.

இனி, பரம்பரைக் கலைகளையும், அவற்றின் துறைகளையும் ஆராய்வோம்.

(தொடரும்)

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

17

தென் திருவாங்கூரில் மிஸ்டர் ரிஞ்ச்ல்டப் என்னும் ஜெர்மானியப் பாதிரியார் சத்திய நாதன் ஜெனிக்கே முதலியவர்களின் உதவி கொண்டு கிருஸ்துவ மதப் பிரசாரத்தில் வெற்றி பெற்ருர். இவர் 1817ல் படோலியா புறப்பட்டபோது கிட்டத்தட்ட 1000 பேர் கிருஸ்துவர்களாக மாறியிருந்தனர். இவரது வேலையை அதே ஆண்டில் லண்டன் மிஷனரி சங்கத்தாரால் அனுப்பப்பட்ட மீட் என்பார் மேற்கொண்டார். இவர் அரசாங்க நீதிபதியாயும் வேலை பார்த்து வந்தார். இவருடன் மிஸ்டர்நீல் என்பாரும் தொண்டாற்றி வநதார். இருவரும் பயன் மிக்கக் காரியங்கள் ஆற்றினர். நாகர் கோவிலில் தலைமை ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இந்நகரில் சர்ச்சும் போர்டிங் பள்ளிகளும் நிறுவப்பட்டன. இவைகட்கெல்லாம் திருவாங்கூர் ராணியின் உதவியும் கிடைத்து வந்தது. நாகர் கோவில் மிஷன் மிஸ்டர் மால்ட் என்பவரால் பெரிதும் வளர்ச்சி யடைந்தது. மிஸ்டர் மால்ட் அவர்கட்கு எலிசா என்னும் மகள் இருந்தாள். இந்த எலிசாவைத்தான் பிஷப் கால்டுவெல் என்று பின்னர் உலகம் முழுவதும் கொண்டாடிய ராபர்ட் கால்டுவெல் கடிமணம் புரிந்து கொண்டார். கணவனும் மனைவியும் மனமும் குணமும் ஒன்று கலந்து இடையன் குடியில் கிருஸ்துவ மதத் தொண்டு செய்து வந்தனர். திருநெல்வேலி சீமையில் ஆயிரக்கணக்கான மக்களை கிருஸ்தவர்களாக மாற்றிய பெருமை கால்டுவெல்லையே சேரும். உயர்தரக் கல்வியும் பெண் கல்வியும் பரவுதற்கானவேற்பாடுகளை இவ்விருவரும் செய்ததுக் குறிப்பிடத் தக்கதாகும். இவர் முயற்சியால் தூத்துக்குடியில் ஓர் ஆங்கிலக் கலாசாலை நிறுவப் பெற்றது. தமிழ் மொழியின் சிறப்பை உலகம் யாவும் அறியுமாறுச் செய்தவர் கால்டுவெல் அவர்களே எனக்கூறின் நூறுக்கு நூறு உண்மையாகும். "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற தமது மொழி ஆராய்ச்சி நூல் மூலம் திராவிடர்களின் புகழ்உலகம் எங்கணும் பரவச் செய்தார். இந்நூல் 1856ல் முதன் முதலாக வெளி வந்தது. இவர் திருநெல்வேலி நாட்டைப் பற்றியும், திருநெல்வேலி சாணர் வரலாறு பற்றியும் நூல்கள் எழுதியுள்ளார். இவரது பெயர் இப்பார் உள்ளளவும் திராவிடர்களால் நினைக்கப் பெற்று வரும் என்பதில் ஐயமில்லை.

திருநெல்வேலி மிஷன் ஆற்றிய சிறப்பான தொண்டுகளில் ரெவரண்ட். ஜி. யூ. போப் அவர்களின் தொண்டு குறிப்பிடத் தக்கதாகும். "போப் ஐயர் ஆங்கிலேயர். வெஸ்லியன் மிஷன் சங்கச் சார்பாகத் தமிழ் நாட்டிற் சமயத் தொண்டு செய்து வந்தார். 1839 முதல் பத்து ஆண்டுகள் திருநெல்வேலியில இருந்தார். அங்கிருக்கும் போது சாயர்புரம் என்னும் இடத்தில் ஒரு பாடசாலையை நிறுவினர். பிறகு தஞ்சாவூரில் எட்டு ஆண்டுகள் வசித்து அங்குள்ள மிஷனையும் உயர்தரப் பாடசாலையையும் மேற்பார்வையிட்டு நிலைப்படுத்தினர். பிறகு, உதகமண்டலம் சென்று சில ஆண்டுவரையில் தொண்டாற்றினர், 1871ல் பெங்களுருக்குச் சென்று மதகுருவாகவும் உத்தியோகம் செய்து வந்தார். 1882ல் இங்கிலாந்து சென்று மான்செஸ்டர் மாகாணத்து எஸ். பி. ஜி காரியதரிசியாய் மூன்றுண்டுகள் இருந்தார். பின்னர், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராக அமர்ந்திருந்தார். 1894ம் ஆண்டில் இவருக்கு டி. டி. (D. D) பட்டம் அளிக்கப்பட்டது. போப் ஐயர் தமிழ் மொழியின் உண்மைச் சிறப்பை உலகம் அறியும்படி செய்தவர்களில் ஒருவர். இவர் இயற்றிய தமிழ்ச்சார்பான நூல்களாவன: திருவாசகம் ஆங்கில மொழி பெயர்ப்பு, நாலடியார் ஆங்கில மொழி பெயர்ப்பு, திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு தமிழ் இலக்கணம் மூன்று பாகங்கள். இவையன்றியும் தமிழ்ச் செய்யுள்களைத் தொகுத்துத் 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம் என்னும் பெயருடன் அச்சிட்டு வெளியிட்டார். புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை என்னும நூல்களிலிருந்து சில பாட்டுகளை ஆங்கிலத்திற் செய்யுளாக மொழி பெயர்த்திருக்கிருர்' 'கிருஸ்துவமும் — தமிழும்' எனும் நூலில் மயிலை சீனிவேங்கடசாமி கூறியிருக்கும் இவ்விவரங்களிலிருந்து போப் அவர்களது புகழ் தெரியவரும்.

இப்படியாக திருநெல்வேலி சீமையில் கிருஸ்துவ மத வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருவதைக் கேட்ட இங்கிலாந்து நண்பர்கள் மேலும் மேலும் உதவி அளித்தனர். இவர்கள். அளித்த உதவியைக் கொண்டு திருநெல்வேலியிலும் தென் திருவாங்கூரிலும் சர்ச் ஸ்தாபனங்கள் மட்டுமல்ல புதிய புதிய சிறு நகரங்களும் கல்வி ஸ்தாபனங்களும் பெரும் வளர்ச்சி யடைந்தன. நெய்யூரில் ஒரு பல்கலைக் கல்விக் கூடம் நிறுவப்பட்டு வளர்ச்சி யடைந்ததும், நாகர் கோவிலில் இருந்த போர்டிங் ஸ்கூல் 120 பெண்களைக் கொண்ட அளவில் விஸ்தரிக்கப் பட்டதும் குறிப்பிடத் தக்கன, நாகர் கோவில், நெய்யூர், கொல்லம் ஆகிய இடங்களில் அச்சுக்கூடங்களும் விரிவான முறையில் நிறுவப்பட்டன. சாந்தபுரம் என்ற இடத்தில் ஒரு சர்ச்சும் பெண்கள் பள்ளிக்கூடமும் ஏற்படுத்தப் பட்டன. இந்த சாந்தபுரம் ஒரு சிறு பட்டணமாக்வேநிர்மாணிக்கப்பட்டது. இச்சிறு நகரில் இருந்த பெண்கள் பள்ளியில் 100க்கு மேற்பட்ட பெண்கள் கல்வி பெற்று வந்தனர். அவர்களுக்கு பின்னல் வேலை கற்றுக் கொடுக்கப்பட்டது. ஏழை விதவைகளுக்கு ஒரு விடுதி நிர்மாணிக்கப்பட்டு விதவைகள் ஆதரிக்கப்பட்டு வந்தனர். மிஸ்டர் லூயிஸ் என்பாரால் இப்பெரும் காரியம் நடைபெற்றது. இந்த சிறு நகரம் பிச்சிக்குடி இருப்பு என்று மக்களால் அழைக்கப்பட்டு வந்தது. மைலாடி, அகத்தீஸ்வரம், ஆனந்த நாதன் குடியிருப்பு போன்ற மற்ற ஊர்களிலும் இப்படிப்பட்ட முன்னேற்றமான காரியங்கள் செய்யப்பட்டன. ஆனந்த நாதன் குடியிருப்பில் பெண்கள் கல்லூரி ஒன்று இருந்ததும் அதில் பெண்கள் கல்வி பயின்று. வந்ததும் குறிப்பிடத் தக்கனவாகும்.

இத் திருநெல்வேலி மிஷனுனது தோணுஹூர், நல்லூர், சுவிசேஷபுரம், திருச்செந்தூர், எடயன்குடி, சாயர்புரம், பன்னிவளை, மெஞ்ஞானபுரம் முதலிய ஊர்களிலும் பிரமாதமான தொண்டுகள் ஆற்றி வந்தன. இவைகளின் சரித்திரங்களுடன் முற்கூறப்பட்ட ரேனியஸ் அவர்கள் பெயரும் இணைந்துள்ள உண்மையை மறந்து விடுதல் கூடாது.

1854 ல் இப்பிரதேசத்தில் 6000 பையன்களும் 1000 பெண்களும் துவக்கக் கல்வி பெற்று வந்தனர். 360 பையன்களும் 490 பெண்களும் போர்டிங் பள்ளிகளில் கல்வி பயிற்சிப் பெற்று வந்தனர் என திரு. முல்லன்ஸ் கூறுகிருர்.

—தொடரும்

—திராவிடப்பித்தன்

விந்தை வைத்தியர்!

என்னய்யா; ஏன் எப்போது பார்த்தாலும் ஒரு மாதிரியாகவே இருக்கியே; உடம்புக்கு என்ன? எங்கே! இப்படி கையை நீட்டு பார்க்கலாம் என்று சொல்லி, கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, 'உடம்பிலே இரத்த ஓட்டம் குறைந்து விட்டது; நாடி நரம்புகள் எல்லாம் தளர்ந்து போயிருக்கிறது; அதனுல்தான் முகமெல்லாம் சோபையிழந்து பேயறைந்தது போல் இருக்கே' என்று சொல்லும் வைத்தியரிடம், 'இதற்கென்னங்க செய்யலாம்?' 'என்று கேட்டால்,' 'இதற்கா......! ஊம்...! என்ன...!' என்று இழுத்தாற் போலப் பேசும் வைத்தியரை, வைத்தியத்துறையில் தேர்ச்சி பெற்றவர் என்று யாராவது சொல்ல முடியுமா? அவரை 'வைத்தியர்' என்பதைவிட, 'வைத்தியர்' என்னும் போர்வையிலே உலவும் பொதுஜன விரோதி' என்பதே பொருத்த முடையதாகும்.

மற்ற நாடுகளிலெல்லாம் ஆட்சிப் பீடம் ஏறியிருப்பவர்களுக்கு மக்களிடம் மரியாதையும், அச்சமும், அவர்கள் சொல்லுக்கு மதிப்பும், நாட்டுக்கு நல்லது செய்யவேண்டுமென்கிற உயர் நோக்கமும் தோன்றுகிறது. அதனுல் நாட்டிலும் நாளுக்கு நாள் நிலைமைகள் வளர்ந்து வருகின்றன, ஆனுல் இங்கோ, அவர்கள் இட்டதே சட்டம்; சரியா தவறு என்று சந்தேகிப்பதே குற்றம் என்று கூறப்படுகிறது. ஏன் என்று தட்டிக்கேட்பதே பாபச் செயலாகக் கருதப்படுகிறது. நாடு நாளுக்கு நாள் தேய்பிறை வனமாக மாறிக்கொண்டிருக்கிறது. இத்தகைய பக்தி மனப்பான்மை—பூஜா உணர்ச்சி வளர இடந் தருவது மிகமிக ஆபத்தான செயல் என்பதே ஜனநாயக முறையிலே நம்பிக்கை கொண்டோரின் கருத்தாகும்.

மக்களின் சிந்தனையிலே, இப்படி ஓர் மாபெரும் தேக்கம் ஏற்பட்டு விட்ட காரணத்தால்தான், அரசுக்கட்டில் ஏறியிருப்போர், 'நம்மைக் கேட்க யார் இருக்கிருர்கள்? அப்படியே கேட்டாலும் கேட்போர் வாயடைத்துப் போகும்படி செய்யும் வல்லமை நம்மிடமிருக்கும் போது நமக்கென்ன பயம்?' என்கிற மனப்பான்மையில் தான் இத்தனை நாளும் ஆட்சியை நடத்திக் கொண்டு வந்திருக்கிருர்கள். இதை நாமும், நம்மால் முடிந்தவரை அவ்வப்போது எடுத்துக்காட்டி ஆட்சியாளரின் தகாத செயல்களை யெல்லாம் மக்களிடம் விளக்கிக் கூறிவந்திருக்கிரோம். அப்படி நம்மால், ஆட்சியாளரின் தவறுகளைச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தபோதெல்லாம், பதவி ஆசையின் காரணமாக நாம் அவர்களைக் கண்டிப்பதாகத் தான் மக்கள் எண்ணி வந்தார்களே தவிர, நாம் கூறுவதிலே உள்ள நியாயத்தை ஒரு நாளும் எண்ணிப் பார்த்ததில்லை. அதன் விளைவாக இன்றைக்கு நாட்டிலே எத்தனையோ கோரக் காட்சிகளைக் காணவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பிடத் தக்கவை, வேலையில்லாத்திண்டாட்டமும் சோம்பேறித்தனமாகும்.

ஆட்சியாளர்களே கண்டு மருட்சியடையும் அளவுக்கு அவை நிலைபெற்று விட்டன நாட்டில்! எனவே தான் ஆசியாவின் ஜோதி—அலகாபாத் பண்டிதர் நேரு அவர்களே சில நாட்களுக்கு முன் காங்கிரஸ் பெண்கள் ஆர்கனைசர்கள் கூட்டத்தில் பேசும்போது 'நாட்டிலே 80 லட்சம் காஷாயதாரிகள் எவ்வித வேலையும் செய்யாமல் உணவும் உறைவிடமும் பெற இயலும் என்றெண்ணிச் சோம்பேறி வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிருர்கள்' என்று கூறியிருக்கிருர்.

இந்தக் காஷாயதாரிகளைப் பற்றி அவர்களின் பூர்வீகத்தைப்பற்றி நேரு பண்டிதர் அறிந்திருப்பதைவிட நாம் அதிகமாகவே தெரிந்து கொண்டிருக்கிரோம். எனவேதான், அந்தச் சோற்றுலடித்த பிண்டங்களையும் அவர்களின் உறைவிடமான மதவெறி யாட்டத்தையும் ஒழிப்பதை நமது முதற்பணியாக ஏற்றுக் கொண்டிருக்கிரோம்.

'காஷாயதாரிகள்' என்று நேரு பண்டிதரால் குறிப்பிடப்படும் ஆட்கள் இருக்கிருர்களே; ஒருவர் இருவர் அல்ல —80 லட்சம் பேர் இருக்கிருர்களாம், இந்த நாட்டிலே! சொல்லுவது நாமல்ல; நாடாளும் பொறுப்பை மேற்கொண்டிருப்பவர்! ஆம்! அவர்தான் உரைக்கிருர் இந்த வெட்கக்கேடான செய்தியை!

இவர்களும் சரி, நம்மால் குறிப்பிடப்பட்ட மற்ற வேலையற்றோர் கூட்டத்திலும் சரி, இருப்பவர்கள் அத்தனை பேருமே சோம்பேறிகளாகவே காலங்கழிக்க விரும்புவதாக யாரும் அறுதியிட்டுக் கூறமுடியாது. வாதத்திற்காக அதை ஒப்புக்கொண்டாலும் அவர்களை அந்த நிலையிலிருந்து மேல்நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு யாருடையது! அதற்காக இதுவரை ஆட்சியாளர் என்ன செய்திருக்கிருர்கள் அல்லது இனியாவது ஏதேனும் செய்யும் உத்தேசமுண்டா?

ஒரு நாட்டின் பிரதமர் தன் நாட்டிலே யிருக்கும் குறையைப் பற்றிக் குறிப்பிடும்போது, அந்தக் குறைநீங்க வழியும்வகுத்து தருவார் என்று நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது இயல்புதானே!

அந்த இயல்பான பண்போடு பண்டிதரின் பேச்சைப் படித்துக் கொண்டு வந்த நமக்குப் பெரும் ஏமாற்றந்தான் பதிலாகக் கிடைத்தது. 'இது சரியல்ல' என்ற சமாதானத்தைத் தவிர எதையுமே காண முடியவில்லை. அவரது உரையில்! கட்டுரையின் துவக்கத்திலே கூறப்பட்ட வைத்தியனுடைய போக்கிலேதான் இருக்கிறது. இந்த அதிசய வைத்தியரின் பேச்சும்.

இப்படிக் குறையை மட்டும் சொல்லிவிட்டு அதுதீர வழிமுறை கூருமல் போவது ஜனநாயகப் பண்புக்கேஇழுக்கான செயலாகும். நாட்டை நாசமாக்கும் பிரச்னைகளை மூடியிட்டு மறைக்க முயல்வது மக்களுக்கு செய்யும் பெருந்துரோகமாகும்.

இந்த லட்சணத்திலே இவர்கள் உலக சமாதானத்திற்காகப் பாடுபடுவதாகப் பெருமை யடித்துக் கொள்வது, தாய் தவிட்டுக்கு அழும்போது தானம் செய்யப்போன தனயனின் கதையைத்தான் நினைவு படுத்துகிறது. —'சிந்தனை'

மாஸ்கோ பயணம்.

ஜூன் 4, 1955, பிரதமர் நேரு, புது தில்லியை விட்டு, ருஷ்யா நோக்கி, நகர்ந்தார். உடன் அவரது அருமைக் குமாரி இந்திரா காந்தியும் செல்கிறார். சீனுவுக்கும் நேருவுடன் சென்றார்.

வழிகூட்டி அனுப்பு விழாவின் போது "திலகம்" இட்டுக்கொண்டார் நேரு. (நமது 'அண்ணா' மொழியில் "டிராயிங்" தீட்டிக் கொண்டார்!) நெற்றியில் திலகம் கூடாது, என்று மறுக்கும் அளவுக்கு இன்னும் தீவிரவாதி ஆக வில்லை அவர். ஆனால் அவருக்குத் திலகம் ஏற்பதென்பது, மாலை ஏந்தக் கழுத்தை நீட்டுவதைப் போல். கைகுலுக்கக்கரம் நீட்டுவதுபோல், கட்டித் தழுவ இரு கை கொண்டு அணைப்பதைப் போல், உள்ள அன்பும், மரியாதையுங் கொண்ட, செய்கையாகும். எனவே அவர் திலகம் வைத்துக் கொள்வது இந்துமத வெறியென்றோ, கடவுள் பயபக்தியென்றோ, கருத இடமில்லை. விமானத்தின் உள் நுழைந்ததும் நெற்றி வியர்வையைத் துடைக்கிற "சாக்காக"த் துடைத்து, கைக்குட்டையை 'வண்ணாங் கூடை'யில் போட்டு விடுபவர்தான் நேரு! இதை அவரது வாழ்க்கையின் நடவடிக்கைகளிலிருந்தே தெளியலாம்.

பூனா வந்து இறங்கினார். பட்டாளத்தார் நடைப் பயிற்சிக் காட்சியைக் கண்டு வணக்கம் ஏற்றார், வணக்கம் வழங்கினார்.

இந்திய இராணுவ சரித்திரத்திலேயே முதன் முதலாக இராணுவப் பயிற்சி நடை ஒலிகளை இந்தியில் முழங்குவதை, பூனாவில் கேட்டு மகிழ்ந்தார் நேரு. (நட; இடம்—வலம்; இடம்—வலம்; நில்; படையே! வேகம் நகர்; நேரு பக்கம் பார்வை; வணக்கம்!; நில்லு!; கலையலாம்!—என்பன போன்ற ஒலிகளை ஆங்கிலத்தில் கூறுவதை ஒழித்து இந்தியில் கூறினார்கள் — எப்படியாவது தேசிய மொழியாகித் தொலைய வேண்டுமே என்ற காரணத்தால் என்க!)

"அரசியல் கண்ணோட்டத்தோடோ, அல்லது வேறு எவ்வித உலகத் தகராறைத் தீர்த்து வைக்கும் எண்ணத்தோடோ, நான் மாஸ்கோ பயணத்தை மேற்கொள்ள வில்லை! அயல் நாட்டுத் தலைவர்களோடு பேசுவேன்! அவர்களைப் புரிந்து கொள்வேன்! உலகை உலுக்கிடும் பிரச்னைகளைக் குறித்து எனது எண்ணங்களை அவர்கள் விழைந்தால், வழங்கிடுவேன்! உலக நாடுகள் ஒன்றை யொன்று முறைத்துப் பார்த்து உறுமிக் கொண்டிருக்கின்றன! அத்தகைய முறைப்பையும், உறுமுதலையும் அகற்ற, அத் தலைவர்கள் நமது உதவியை நாடினால், ஆவன செய்து, வேற்றுமை களைந்து, ஒற்றுமையை நிலை நாட்டி, உதவி புரியும் பணியை மகிழ்ச்சியுடன் ஏற்கக் காத்துக் கிடக்கிறேன்!" என்றெல்லாம் தம் பயணத்தைக் குறித்துப் பூனாவில் பேசினார்.

பூனாவிலிருந்து ஜூன் 5, 1955 யில் பம்பாய் வந்து, அங்கிருந்து கெய்ரோ சென்றார். கெய்ரோவிலும், ரோம் நகரத்திலும் இரண்டு, இரண்டு நாட்கள் தங்கி ஜூன் 7 அல்லது 8 ருஷ்யா போய்ச் சேருகிறார்.

சிகப்புக் கம்பளம் விரித்து, நேருவை வரவேற்கப் 'பிரம்மாண்ட'மான ஏற்பாடுகளெல்லாம் நடைபெறுகின்றன. ருஷ்யாவில் நேரு, லெனின் கிராட், ஸ்டாலின் கிராட், ஜியார்ஜியா, யுக்ரைன், கருங்கடல் வாசஸ்தலம், மத்திய ஆசியா சோவியத் குடியரசுப்பகுதி, ஆகியவைகளைக் காண்பார்.

நேரு, முன்பு ஒரு முறை ருஷ்யா சென்றதற்கும், தற்போது 28 ஆண்டு கழித்துச் செல்வதற்கும், அந்நாட்டிலும், நாட்டு மக்களிடையேயும் எத்தகைய மாறுதல், முற்போக்கு, நலம், ஏற்பட்டிருக்கிறதென்பதை நேரில் கண்டுகளிக்க விரும்புகிறார்.

அதோடு ருஷ்யாவிடமிருந்துப் 'பாடங்கற்றுக் கொள்ள வேண்டியது' நிறையக் கிடக்கிறது! அதையும் படித்துவர விரும்புகிறார் நேரு. கற்கும் பாடத்தை இந்தியாவிற்கும் பயன் படுத்தத் துடிக்கிறார்.

ருஷ்யா 'பாடத்தை' பதினைந்து நாட்கள் வரை அங்கே தங்கிக் கற்ற பிறகு, செகோசுலோவாகியா, போலண்டு, ஆஸ்திரியா, யுகோசுலாவியா முதலிய நாடுகளுக்கும் சென்று, சுமார் ஐந்து வாரங்கள் கழிந்த பிறகு மீண்டும் இந்தியா வந்து சேருவார் நேரு.

"டிஸ்கவரி ஆஃப் இண்டியா" நேரு, ஜெயிலில் எழுதிய புத்தகம் (இந்தியாவின் கண்டு பிடிப்பு), ருஷ்ய மொழியிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தார்.

நேருவின் இந்த "மாஸ்கோ பயண"த்தின் செய்திகளைத் திரட்டி, இந்திப் பத்திரிகைகளுக்குத்தர, ஒன்பது தலைசிறந்த பத்திரிகை ஆசிரியர்களும், நிருபர்களும் ஏற்கனவே மாஸ்கோ போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். அந்த ஒன்பது பேர்களில் பம்பாய் 'பிளிட்ஸ்' பத்திரிகை ஆசிரியர் ஆர். கே. கரான்ஜியாவும் ஒருவர். 'இந்து,' 'நேஷனல் ஹெரால்டு', 'இந்துஸ்தான் டைம்ஸ்', 'ஃபிரீ பிரஸ் ஜர்னல்', 'இந்துஸ்தான் ஸ்டாண்டார்டு', 'ஜென்மபூமி', 'யு.பி ஐ', 'பி. டி. ஐ" பிரதிநிதிகளும் சென்றுள்ளார்கள்.

நேரு சீனு சென்று திருப்பியதும், ஆவடியில் "சோஷலிச அமைப்பு போன்ற ஒரு சமுதாய அமைப்பு" என்பதை அவிழ்த்து விட்டார்!

ருஷ்யா சென்று திரும்பியதும் "இன்குலாப் ஜிந்தாபாத்" என்று 'முஷ்டியை' முறுக்கிக் காட்டி வான் முட்டக் 'கூவப்' போகிறாரோ? சக்கரம் பொறித்த மூவர்ணக் கொடியை ஒரே 'இரத்தச் சாயம்' தோய்த்து, அறிவாள்—சுத்தி, பொறித்துத் தூக்கிவிடுவாரோ? என்று எனக்கு மட்டும் ஒரு "பயம்" இருக்கத்தான் செய்கிறது!

"திருவேடம்"

●

முதல் பக்கத் தொடர்ச்சி

டார்! இந்த அபூர்வ ஆராய்ச்சியின் விளைவாக அவர் கண்டு பிடித்தது என்ன தெரியுமோ!

> கல்லிலும் ஆண்டவன் இருக்கிறான். கல்லில் ஆண்டவன் இலலையென்று கூறுபவர்கள் முட்டாள்கள் என்று பட்டம் சூட்டினாராம் இந்த பாரத ரத்தினம்!

ஆச்சாரியார் இப்படி நாலாந்தர ஆட்களைப்போல பேசியதற்குக் காரணம், சுயமரியாதை இயக்கத்தார்தானே இப்படி கூறுகிறார்கள்; எனவே ஆதீனத்தின் அணைப்பிலிருந்து கொண்டு சுயமரியாதை இயக்கத்தினரை வெளுத்துக் கட்டிவிடலாம் என்று துணிந்து விட்டார் போலும்!

எனவே ஆச்சாரியாருக்கு ஒரு உண்மையை நினைவூட்ட விரும்புகிறோம். அதற்குப் பின்னராவது முட்டாள்கள் யார் என்பதை அவர் உணர்ந்து திருந்துவார் என்று நம்புகிறோம்.

> நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே சுற்றிவந்து முணு முணுக்கும் சொல்லுமந்திரம் ஏதடா!
>
> கல்லிலும் — செம்பிலுமா யிருப்பான் எணையீன்ற ஆண்டவன்?
>
> கல்லைக் காட்டி காசு பறிக்கும் கயவர்களே கடவுள் தன்மைக்கு முதல் விரோதிகள்.
>
> கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போக.

என இவ்வாறெல்லாம் விரிவாக எடுத்துக் காட்டிய சித்தர், திருமூலர், சிவவாக்கியர், இராமலிங்க அடிகள் போன்றவர்களெல்லாம் முட்டாள்களா? ஆச்சாரியாரின் அபூர்வ ஆராய்ச்சியில் எவ்வளவு பழமை வெறியும் —அறிவுடைமையற்ற போக்கும் நிரம்பி வழிகிறது என்பது விளங்குகிறதல்லவா!

கல்லில் கடவுள் இருப்பதாகக் கூறும் ஆச்சாரியாரைக் கேட்கிறோம். இன்று கோயில்களில் ஆண்டவன் பேரால் உருவாக்கப்பட்டிருக்கும் கற்சிலைகளின் காலம் எவ்வளவு? அந்த சிலையை உருவாக்கியவர்கள் யார்? கோயில்களில் சிலைகளை அமைத்த காலம் எது? அதற்கு முன்னதாக ஆண்டவன் வழிபாடு நாட்டிலே இல்லையா? இன்னும் சொல்வோம் பரீட்சார்த்தமாக வேண்டுமானால் இன்று கோயில்களிலுள்ள சிலைகளை இதே ஆச்சாரியார் வேறு காரியத்துக்குப் பயன்படுத்திப் பார்க்கட்டும். அதிலிருப்பதாகக் கூறப்படும் ஆண்டவன் தன்மை என்னதான் செய்துவிடுகிறதென்பதை ஆச்சாரியாரே உணர முன் வருவாரா வென்று கேட்கிறோம்,

சுயமரியாதை இயக்கக் கொள்கையைத் தாக்கிப் பேசவேண்டும் என்பதற்காகவே — மகான்களையும் சித்தர்களையும் அவர்கள் கூறிய அறிவுரைகளையும் முட்டாள்தனமானது என்று கூறும் ஆச்சாரியாரின் புத்தியையும் ஆராய்ச்சியையும் எதற்கு ஒப்பிடலாம் என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறோம்,

நம் மாநிலப் பொதுப்பணியில் இன்று ஆச்சாரியார் ஒரு அபஸ்வரமாகக் காட்சியளித்து வருகிறார் என்று கூறப்படுவதில் முழுக்க முழுக்க பொருத்தமிருக்கிறது என்பதை ஆச்சாரியாரே தருமபுர ஆதீன மடப் பேச்சில் உறுதிப்படுத்திக் கொண்டார்! பரிதாபம்!

இதனால்தான் —அன்றே இந்த ஆச்சாரியாருக்கு குல்லுகபட்டர் என்ற பட்டத்தை சர். ஆர். கே. சண்முகம் சூட்டினார் போலும்.

—நக்கீரன்

திருமணம்

12-6-55 ஞாயிறு காலை 8 மணிக்கு கடலூர் புதுப்பாளையம் மெயின் ரோடு தாலூகா ஆபீஸ் நெ 2 இல்லத்தில் தோழர் ம குப்புசாமிக்கும் தோழியர் அம்புசம் அம்மையாருக்கும் திருமணவிழா தோழர் எம் சுந்தரராசலு எம். சி. அவர்கள் தலைமையில் நடைபெறும் தோழர்கள் என். வி. நடராசன், திருக்குறள் முனுசாமி, என் சித்தார்த்தன் ஆகியோர் பேசுவர்.

'மூன்று இரவுகள்' தொடக்கவிழா

சென்னை சிந்தாதிரிப்பேட்டை நண்பர்கள் நலவுரிமை மன்றத்தின் நாடகக் குழுவினரால் நடத்தவிருக்கும் ஆர். ஜார்ஜ் தீட்டிய 'மூன்று இரவுகள்' என்னும் சமூக நாடகத்தின் தொடக்க விழா 5—6—55 ஞாயிறு மாலை 6 மணியளவில் மன்றத்தில் நடைபெற்றது. எஸ். துரைராஜ் அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்கள் ஆர். ஜார்ஜ். புகழேந்தி, வளையாபதி முத்துகிருஷ்ணன், பெ. தா. இன்மொழியன், குமாரி சி. எஸ். ஜெகதாம்பாள். ஆர். எல் லிங்கராஜ் (டைரக்டர்) ஆகியோர் நாடகத்தின்சிறப்பைப் பற்றியும் மற்ற வளர்ச்சியைக் குறித்தும் பேசினர்,

எஸ், எம். துரைராஜ் மன்றத் தலைவராகவும், த, இராஜரத்தினம் செயலாளராகவும், பி. வி. சீதாராமன், எம். எஸ். மோகன் கூட்டு செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'மக்கள் தீர்ப்பு?'

11—6—55 சனி மாலை 6-30 மணிக்கு பல்லாவரம் பஸ் நிலையத் திடலில், தி. மு. கழகத்தின் சார்பாக, கைவல்யம் நாடக மன்றத்தாரின் 'மக்கள் தீர்ப்பு' நாடகம் நடைபெறும். நாடகத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகிப்பார்கள். நாடகத்தில் மாநிலமாநாட்டிற்குநிதி அளிக்கப்படும்.

செய்திகள்

பம்பாய்

பாண்டுப்

26—5—55 மாலை 7-30 மணிக்கு பாண்டுப் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு கூட்டம் செயலாளர் தலைமையில் தோழர் ஆர். தாசன் இல்லத்தில் நடைபெற்றபோது மாநில மாநாட்டுக்கு பாண்டுப் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூ. 100 நன்கொடை திரட்டி தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேறின.

அடுத்து துணைச்செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

ஆமதாபாத்

29—5—55-ல் மாலை 6மணிக்கு காங்கரியா நசினுவாடி (ஓபந் தியேட்டர்) எதிர்புரம் அமைத்த திரு வி. க. அரங்கில் ஆ. தி. மு. க. மேதின விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் நா. முனிசாமி அனைவரையும் வரவேற்று பேசினர். பின் விழாவுக்கு தோழர் நா. பெருமாள் தலைமை தாங்கினர். விழாவில் தோழர்கள் இரா. நடராசன், கி. சண்முகம், (மணிநகர் வ. செய). ச. சந்திரன், இரா. வைத்திலிங்கம் ஆகியோர் பேசிய பின் முத்தமிழ் நாடக மன்றத்தினரின் 'யார் நாத்தீகன்' எனும் நாடகம் நடைபெற்றது.

தாலமுத்து-நடராசன் நினைவுப் படிப்பகம், மதுரை

தாலமுத்து நடராசன் நினைவுப்படிப் பகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை 6 மணிக்கு தோழர் பி. மாடசாமி தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் மதுரை நகர் தி. மு. கழகத் துணைச் செயலாளர் என். எஸ். இராசா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றி வைத்தக் கொடியைப் பற்றிய விளக்கம் கூறியபின், செயல் வீரர் எஸ். முத்து, கே. எஸ். சந்தானம், ஆகியோர் கழகத்தின்குறிக்கோள் டணி ஆகியவைபற்றிப் பேசினர்.

இறுதியாக தோழியர் அருண்மொழி பி.ஓ.எல். திராவிடத் தாய்மார்களின் மூடநம்பிக்கை குறித்தும், சமுதாயத் துறையில் நாம் பெறவேண்டிய முன்னேற்றக்கைக் குறித்தும் வடநாட்டுப் பிடிப்பிலிருந்து விலகித் தனித் திராவிடம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்விளக்கி ஏறத்தாழ 1-30மணி நேரம் பேசினர். என். எஸ். இராசா நன்றி கூறினர்.

*

தாலமுத்து நடராசன் நினைவுப்படிப் பகத்தின் உறுப்பினர்கூட்டம் 28-5-55 அன்று தோழர் என்.எஸ். இராசா தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் படிப்பகத்தின் பத்தாவது ஆண்டுவிழா வரவு-செலவுக் கணக்கு வாசிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது கீழ்க்கண்டவர்கள் புதிய நிர்வாகக்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் சி. நடராசன், துணைச் செயலாளர் க. கணபதி, பொருளாளர் மு. கருப்பையா, விளம்பர உறுப்பினர் அ. பெரியசாமி, மா. சுடலைமுத்து

சென்ற ஆண்டு நிர்வாகக் குழுவினருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தாரை வட்டக்குழு

30—5—55 மாலை 6-மணிக்கு கன்னிவாடி அழகிரி திடலில் தாரை வட்ட தி. மு. கழகத்தின் சார்பில் ஓ. எஸ். ராமசாமி தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தாரைவட்டக் கழக செயலாளர் ந. சின்னமுத்துசாமி வரவேற்புரை நல்கினர். பின் கோவை தோழர் செழியன் சமுதாய நிலைபற்றி சுமார் 2 மணி நேரம் பேசினர். பின் சிந்தனைச் சிற்பி சி. பி சிற்றரசு பொதுமக்களின் ஆரவாரங்களிடையே எழுந்து இன்றைய அரசியல் நிலை குறித்து நீண்ட நேரம் பாமர மக்களும் தெள்ளத் தெளியப் புரிந்து கொள்ளுமாறு பேசினர். இரவு 10 மணி அளவிற்கு கன்னிவாடி கே. எஸ். எஸ். கலைமன்றத்தார் நடித்த தூக்குமேடை நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்கு சி. பி. சிற்றரசு தலைமை வகித்து நாடகத்தின் அவசியத்தையும் நடிகர்களின் திறமையும்பற்றி புகழுரை வழங்கினர். கன்னிவாடி வட்டாரமே இதுவரை கண்டிராத மக்கள் ஆயிரக்கிற்கு மேல் கூடியிருந்து நாடகத்தைக் கண்டு களித்தனர்.

விளாம்பட்டி

இவ்வூர் தி. மு கழகச் செயற்குழுக் கூட்டம் கழக அலுவலகத்தில் செயலாளர் தோழர் இ வ மா. தங்கராசன் தலைமையில் நடைபெற்றது. கழகப் பொறுப்புகளை முன்னுள் செயலாளர் தோழர் எஸ். வி. சாமி புதிய செயலாளரிடம் ஒப்புவித்தார், வரவு செலவு கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டன. நிதிப் பொறுப்புகளை பொருளாளர் தோழர் கே. டி. சிவசங்கரன் ஏற்றுக் கொண்டார். ரூ. 25-க்கும் குறையாமல் மாநில மாநாட்டு நிதிக்கு அனுப்பவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

*

இவ்வூர் திரு. சு வேலுராசன் இவ்வாண்டில் எம். பி. பி. எஸ். பரீட்சை தேறி இவ்வூரின் முதல் டாக்டர் ஆனதைப் பாராட்டி திருவாளர்கள் ஆ அ. பாலட்டன், இ. வ மா. தங்கராசன், கே. டி. சிவசங்கரன், என். கே. குருசாமி. ஆகியோர் ஒரு தேநீர் விருந்தளித்தனர். வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது. பாராட்டு விழாவுக்கு திரு எஸ்.வி. சாமி தலைமை வகித்தார். டாக்டரைப் பாராட்டி கே. சுட்டையா பி.எ. எம். சண்முகம் ஆகியோர் பேசினர்

வண்டிப்பெரியார்

31-5-55 மாலை 8-மணிக்கு தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் செயலாளர் கே. எம். அப்பாஸ் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தி. மு. கழகப் பொதுச்செயலாளராக இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றும் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வண்டிப்பெரியார் தி. மு. கழகக் கிளையை மதுரை மாவட்டத்தோடு இணைக்கவேண்டுமெனக் கேட்டு இதனை மீண்டும் புனராலோசனை செய்யுமாறு பொதுச்செயலாளரை இக்குழு கேட்டுக் கொள்கிறது. என்ற தீர்மானமும் நிறைவேற்றி இதுகுறித்த விளக்கத்தை பொதுச்செயலாளர் அவர்களுக்கு எழுதுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வடுகபாளையம்

29—5—55 சனிக்கிழமை யன்று தாராபுரம் தாலுக்காவைச் சேர்ந்த வடுகபாளையத்தில் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்திற்கு வி. எம். பழனிச்சாமி தலைமை தாங்கினர். தாரை இளம் எழிலன் தாரை ஒளிஅழகன், டி. சி. கருப்பண்ணன், கோவை செழியன், மே. சி. சிதம்பரனர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

திருத்தம்

கடந்த வாரத் ''திராவிடன்'' (3—6—55) பக்கம் 13, கலம் 2 பத்தி4 'பிரிட்டிஷ் தேர்தல்' ரிச்சர்டு வெட் என்பவர் 'லார்கு ஹாலிபாக்ஸின்'— என்பதை லார்டு ஹாலிபாக்ஸின் என்றும் தொடர்ந்து 'இரண்டாவது மகள்' என்பதை இரண்டாவது மகன் என்றும் திருத்த வாசிக்க வேண்டுகிறோம்.

—ஆ—ர்

வண்ணையம்பதி

30—5—55 திங்கள் மாலை திரு தி. அ பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடந்த வண்ணை தமிழ் இளைஞர் கழக உறுப்பினர் கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இசைப் பேராசிரியராயும் உறுப்பினராயும் தேர்ந்தெடுத்ததைப் பற்றி கழகம் மகிழ்ச்சி யடைகிறது.

இந்திய பேரரசின் சார்பாக சிறந்த நூலை இயற்றிய திரு. ரா. பி. சேதுபிள்ளை அவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டதைக் குறித்து கழகம் சொல்லின் செல்வரைப்பற்றி பாராட்டுகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தராக திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். எல் சி. அவர்களை தேர்ந்தெடுத்ததைக் குறித்து கழகம் மகிழ்ச்சி யடைந்ததோடு அவரை பாராட்டுகிறது.

சென்னை 3-வது வட்ட தி. மு. க.

4-6-55 சனிமாலை 3-வது வட்ட தி. மு. கழக சார்பில் வண்ணையம்பதி சக்கரை மைதானத்தில் க. சேதுராசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. சண்முகம் இயக்கப் பாடல் பாடினர். தோழர்கள் என். வி. நடராசன், சி. பி, சிற்றரசு, ஆகியோர் பேசினர்,

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்ட மேடையிலேயே தோழர் வள்ளியப்பன், மாரியம்மாள் ஆகியோருக்குத் திருமணம் நடைபெற்றது.

24-5-55 அன்று கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட (அண்ணா அவர்களின்) சொற்பொழிவை ஒலி பரப்பப்பட்டன, மாநில மாநாட்டுக்காக கூட்டத்தில் உண்டியல்மூலம் வசூலான தொகை ரூ. 43-1-0 மாவட்ட செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது,

---

"அண்ணாவிற்கு"த் தடை!

இலங்கையிலிருந்து வெளிவரும் 'அண்ணா' என்ற பத்திரிகை அலுவலகத்தை இலங்கை போலீஸ் அதிகாரிகள் வந்து சோதனையிட்டு ஆசிரியரை கைது செய்தனர் என்றும் (27—5—55) அலுவலகத்திலுள்ள முக்கிய தஸ்தாவேஜுகளையும் கைப்பற்றிச் சென்றுள்ளனர். இதுகுறித்து விசாரணை நடைபெறுகிறதென்றும் அதன் நிர்வாகிகள் அறிவிக்கின்றனர்.

இடமாற்றம்

கடந்த மூன்று ஆண்டு காலமாக மதுரை கீழ்வெளி வீதியில் பணியாற்றி வந்த தி. மு. க. கிளை, முத்துபட்டி பகம், 22-ந் தேதியிலிருந்து லட்சுமி புரம் குருக்குத்தெரு 15 எண்ணுள்ள கட்டடத்தில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும்போது பாதமானது தரையில் வைக்கமுடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ 2-8-0 தபால் சார்ஜ இனும்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
வியாசர்பாடி சென்னை-12

நேயரின் நினைவுக்கு!

வனஜாவின் அந்தஸ்துத் திரையை அறுத்து உண்மை உருவத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறேனென்று மார் தட்டிக் கூறினான் பாலத்து வாசி. அதையுந் தான் பார்த்து விடுவோமே என்று கசப்போடு காத்திருந்தான் சேகர். மருந்து கசக்கிறதே என்பதற்காக அருந்தாமலிருந்தால்...நோய் தீர்ந்துவிடவா போகிறது. சேகரின் 'இதயநோய்' தீர அந்தக் கசப்பான மருந்தும் தேவையாகத்தானிருந்தது!

*

34

வீணையின் நரம்புகளை வேண்டுமென்றே அறுத்துவிடுகிறபோது—வேதனை அறுப்பவனுக்கல்ல...ரசிகனுக்குத்தான். வீணைகானங்கேட்டு விழியிலே மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கும் அந்தக் கலை உள்ளத்துக்குதான் வேதனை கசப்பு எல்லாம்

சேகர் அறுபட்ட வீணையைப் பார்த்தான், பாலத்து வாசியோ நரம்பறுக்கும் நாசகாரனானன். எனவே. திகைக்கவில்லை அவன். சூதுச்செயலால்—சாகச மொழியால் சுட்டெரித்தான் சேகரை. அறுந்த வீணையின் அவலட்சணத்தைக் காணச் சகிக்கவில்லை சேகருக்கு. இருண்ட வானத்துக்கு இதயமே கண்ணாடியாகியது! பாலத்துவாசி கை நீட்டிக் காட்டிய பாதையிலே கால்பதித்து நடந்தான் சேகர், ஒரு முழு இரவும்—முழுப் பகலுமாக உள்ளம் உதைத்துக் கொண்டேயிருந்தது இன்னும் அந்தப் பதைப்பு அடங்கவேயில்லை. புதிரைத்தெளிவாக்கி உள்ளப் புயலுக்கு அமைதி தேடத் துடித்தான். எதிர்பார்த்த அந்த நேரமும் வந்தது. வெடிமருந்துக்குத் தீ வைத்தவன் அதன் இடியோசையை தூரத்திலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுபோல...காத்திருந்தான் கலக்கந் தரும் காட்சியைக் காண!

*

குமரிகளின் கலகலத்த சிரிப்பொலியைப்போல, குற்றாலத்து நீரருவி சலசலத்துப் பாய்ந்து வீழ்ந்து கொண்டிருந்தது. அந்த அருவியின் அன்பணைப்புக்கு ஏங்கி வந்தவர்கள்—நிலைமறந்து பூரித்திருந்தனர். சிலரோ வீடு திரும்ப மனமின்றித் திரும்பத் திரும்ப நீரருவியோடு உறவாடிக் கொண்டேயிருந்தனர். இன்னும் பலர்—தூரத்திலேயிருந்த இரும்புக் கைப்பிடியில் சாய்ந்து கொண்டே மாலையின் லீலா விநோதத்திலே மனதைப் பறிகொடுத்திருந்தனர். பட்டாடையைப் பாலத்துக் கம்பியிலே தொங்கவிட்டுக் கொண்டு பகட்டான மேனியைப் பளிங்கு நீரிலே பொன்னழகிகள் நனைத்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் பூங்கொடிகளின் மீது அருவியிலே நீந்திவந்த புதுமலர்கள் மோதிச் சென்று கொண்டேயிருந்தன. பூவைப் பந்தாக்கி அந்தப் பூவையர் பூரித்தாடினர். அங்கமெலாம் இன்பம் பொங்கப் பாடினர்—ஆடினர். தங்கமேனி கண்டு; தாங்காத குளுமைகண்டு; சிங்காரச் சிட்டாகி......சிரித்து மகிழ்ந்தவரோ ஏராளம் — ஏராளம். காணாத காட்சி கண்டார். தோள் கண்டார்—தோளே கண்டார்! முகங்கண்டார், முகமே கண்டார்! முகங்காட்டி முல்லைச் சிரிப்பு காட்டி. மோக சாம்ராஜ்யத்துக்குத் தூதுவராக்கி வைத்த 'அந்தக் காட்சி' அருவிக் காட்சியேதான் ...... அரண்மனை அந்தப்புரத்தின் அந்தி நேரக் காட்சியல்ல!

சுகவாசிகளுக்கு இன்பக் கட்டங்கள் இப்படித்தானே விரிகின்றன. அங்கே குற்றாலத்தின் குளுமைக்கு விலைபேசிக் கொண்டோரென்ன சாமானியர்களா?...... இல்லவே இல்லை......ராஜாக்கள் திவான்கள்! அவர்கள் மட்டுமா இறக்குமதியாகி யிருக்கிறார்கள். அவர்கள் தான் தன்னந்தனியராக எங்குமே செல்வதில்லையே! அப்படிச் சென்று வருவதிலே 'பயம்' என்பது மட்டுமல்ல. அது அந்தஸ்துக்கே இழுக்காகவும் ஆகிவிடுமாம். எனவேதான் பரிவாரம் விரிகிறது...பராக்குக் கூறுவோர் குவிந்திருக்கின்றனர். ததாஸ்து கூறுவோர் இருந்து விட்டால் போதுமா? சிங்கார மொழிபேச தங்க மேனியருக்கென்ன — பஞ்சமா? தேன்காட்டிலே தேனுக்கா பஞ்சம், ஆடலும் கூடலும் ஆரணங்கோடு—நீராட நீரருவி. துப்பாக்கிக்கு வேலைதர மலைமேடு!

அதோ வரிசை வரிசையாக வனப்பைச் சிந்தி நின்று கொண்டிருக்கும் 'டெஸட்டோ'வும், 'பாண்டியாக்'கும் வளரும் பணநாயகத்தின் உருண்டோடும் சாட்சிகள் தானே!

பூத்துக் குலுங்கிய இன்பத்தைக் கண்டபோது — சுகவாசிகளின் ஒய்யாரஒலத்தைக் கேட்டபோது சேகருக்கு என்னவோ வேதனையாகத்தானிருந்தது மனப்புழு அரித்தது!

இதுவரை நடந்துவந்த தூரத்தை இருவருமே திரும்பிப் பார்த்தனர், சேகரின் கால்கள் மேலே நடைபோடத் தயங்கின. தட்டிக் கொடுத்துக் கால்களை நகர வைத்தான் பாலத்துவாசி. 'இன்னும் கொஞ்ச தூரந்தான்' என்று பாலத்துவாசி கூறிய குரல் கூட ஈனஸ்வரமாக அவன் காதிலே விழுந்தது. மர்மக் குகைக்கு சிறுவனை அழைத்துச் செல்லும் மந்திரக்காரனைப்போல பாலத்து வாசி சேகரின் கண்களுக்கு காட்சியளித்தான்.

'அதோ பார்'...என்று கம்பீரமாக நின்று கையை உயர்த்திக் காட்டினான் பாலத்துவாசி. கை காட்டிய பகுதியிலே பார்வையை அலையவிட்டான் சேகர். மலைச் சாரலின் ஓரத்திலே இரண்டு நங்கைகள் கரத்தோடு கரம் சேர்த்துப் போய்க் கொண்டிருந்தன. வானவில்லைப்போலத் தலையோடு சாய்ந்திருந்த பூச்சரம் மட்டும் தெளிவாகத் தெரிந்து கொண்டேயிருந்தது...உருவமும் நகர்ந்து கொண்டேயிருந்தது.

நிலா முகங் காட்டியது. தங்க முலாம் அருவிக்கெல்லாம் ஏறியிருந்தது. பசும்புல் தரையிலே பூச்சரந் தாங்கிய கூந்தலழகியும் ...துள்ள உருவமும் அமர்ந்தனர் ...இல்லை ஒருவர் முதுகை மற்றவர் தாங்கிச் சாய்ந்தனர். காட்சியைப் பார்த்துக் கொண்டே பாலத்துவாசி சேகரின் முதுகில் தட்டிச் சிரித்தான்—பேசினான்!

"...பார் சேகர் அதோ அகலக் கண்களை விரித்துப் பார்......பதிவிரதா சிரோண்மணி......ஆண்வாடையே கட்டுப் படாத ஞானமணி என்றெல்லாம் பேசிப் பூரித்தாயே அந்த மணிமேகலையைப் பார். கையிலே பழரசக் கோப்பையும் மார்பிலே மனதுக்குகந்தவனையும் சாய்த்துக் கொண்டு தென்றல் கீதம் பாட, நிலவு மோக வீணை மீட்ட, பசும்புல் தரையைப் பஞ்சணையாக்கிப் பரவசப் படுகிறாளே அவள்தானப்பா உன் உள்ளத்து ராணி, வனஜா என்று வாய்நிறை, இதயம் இனிக்கக் கூறுவாயே...அந்தப் பெண்ணேயியம் உன் நெஞ்சைப் புண்ணாக்குங் காட்சியைப் பார். அதோ வனஜா...ஆமாம் உன்னோடு படித்துப் பழகி நேசங் காட்டிய நெஞ்சிலே பாசமூட்டி இன்று மோச முக்காடு கட்டி வேஷம் போடும் அதே வனஜா தான்...பக்கத்திலும் பார் யார் தெரிகிறதா? அந்த மல்லிகைக் கொடியின் மலர்க்கரம் பிடித்து மகிழ்ந்திருக்கிறானே அவனது அசடுவழியும் முகத்தை நன்றாக உற்றுப்பார்!

(முடியாத பயணம்)

பேராசிரியர் பேசுகிறார்—தொடர்ச்சி

இருண்ட பகுதியில் போகும் போது காணும் மரமும் உயர்ந்த நிலப்பகுதியும் பேயும் பிசாசும் போல் இதயத்தில் 'சில்லுக்குப்பதி'கிறதல்லவா? ஏன் அப்படி ஏற்படுகிறது. மயான வெளியில் போகும்போது பிணம் எழுந்து நின்று பேசுவதைப் போல் சிலர் கற்பனை செய்து கொள்வது ஏன்? இப்படியாகவே சிந்திக்க முற்பட்டால் எல்லாவற்றிற்கும் அடிப்படையானது மனம்தான் என்ற உண்மையை யாவருமே ஒத்துக் கொள்ள ' வேண்டும். மனம் என்று மக்கள் சொல்வதைத் தான் பகுத்தறிவு என்று சீர்திருத்தக்காரர்கள் சொல்லுகிறார்கள். உலகமே ஒவ்வொரு மனிதனின் பகுத்தறிவின் அடிப்படையில்தான் பிறக்கிறது.

மனம் அல்லது பகுத்தறிவின் துணைகொண்டு நீ சிந்திக்கத் துணிய வேண்டும், மனம் உணர்ந்து ஒரு காரியத்தைச் செய். எதற்கும் காரணத்தை உணர்ந்து செய்யப்பழகு. காரணமுணர்ந்து செய்ய இயலா விட்டால் நல்ல நூல்களைக் கற்றுத் தெரிந்து கொள். காரணமுணராதவற்றை வேதாந்தம் என்று கூறிக்கொண்டு உனக்கு எட்டாத கடவுளைப்பற்றி உனக்கு முழுதும் தெரிந்ததாகப் பிதற்றாதே! அமைதிக் காலத்திலே சிந்திக்கும் முடிவுதான் உண்மையானமுடிவு அமைதிக் காலத்தில்தான் நாடி நரம்புகள் நன்கு வேலை செய்யும். மூளையிலும் தகுந்த எண்ணங்கள் பதியும், அஞ்சி அஞ்சி தோற்றுவிக்கும் இறைவனை மாயை என்று உணரும்காலம் வரவேண்டும். அப்போதுதான் பகுத்தறிவின் மாண்பு வெளியாகும். அதைத்தான் நாம் மறுமலர்ச்சி என்று சொல்ல முடியும், அந்த நாளும் வராதோ?

—(தொடரும்)

—வி. சுந்தரராசு

S.P.T.
SANKARAN PROGRESSIVE TUTORIALS
TIRUCHI
SANKARAN PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P. O. TIRUCHIRAPALLI.
RE-OPENS. 10TH JUNE 1955.
S. S. L. C., INTER, B.A., ETC.
(All Parts & Groups)
The Greatest Living Poet
BARATHI DASAN
will teach you Tamil !
Mrs. JUDITH LOUIS B.A. (Hons) Vice Principal
N. J. DE VADAS, M.A Principal

சுவைத்துப் பாரீர்

டபிள்யூ. பி. டி. எழிலன்

மஹாத்மா ?

பஞ்சாப் மொழிவழி மாகாணம் வேண்டுமென்று மாஸ்டர் தாராசிங் தலைமையில் ஆயிரமாயிரம் அகாலியர்கள் அறப்போர் நடத்துகிறார்கள்.

அமிர்தசரஸில் அன்றாடம் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் அறப்போரில் பங்கு கொண்டு சிறைச்சாலை ஏகியவண்ணம் உள்ளார்கள். இவ்வறப்போரில் வயது நிரம்பிய பெரியோர் பல்லோரும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்த அறப்போரை பிரதமர் நேரு சிறுபிள்ளைத்தனம் என்று கூறிவிட்டார். இதில் பெரியவர்களும் ஈடுபட்டிருக்கிறார்களே என்று பேராச்சரியப்பட்டாராம் நேரு.

பஞ்சாபின் தற்போதைய கலவரத்தில் இரண்டு கோஷ்டிகள் ஒன்றையொன்று மோதிக்கொண்டு கற்களை வீசுவதும் மண்டையை உடைப்பதுமாய் உள்ளன. இது அருவருக்கத்தக்க செய்தி என்று கூறுகிறார் நேரு.

ஒரு முக்கிய கோஷ்டிக்குப் பெயர் அகாலியர்கள், மற்றது என்ன பெயரில் உள்ளது என்று தெரியவில்லை என்றாராம் நேரு.

உடனே அருகிலிருந்தப் பத்திரிகை நிருபர் ஒருவர் அக்கோஷ்டியின் பெயர் மஹாபஞ்சாபியர்கள் என்றாராம்.

அதைக் கேட்ட நேரு, என்ன! 'மஹாபஞ்சாப்' என்ன வாழ்கிறது. இந்த 'மஹா'வைக் கேட்டாலே 'மஹா—மஹா' ஆத்திரம் வருகிறது! என்னைப் பொருத்தவரை இந்த 'மஹாபஞ்சாப்' 'மஹாதில்லி' ஏன்! 'மஹா—எதையுமே' நான் அடியோடு வெறுக்கிறேன்! என்று ஆவேசப்பட்டாராம் நேரு.

இங்கே ஒரு சந்தேகம்! மஹா—ஆத்மாவையும், மஹாத்மா காந்தியைக் கூடச் சேர்த்து நேரு வெறுக்கிறாரா; அல்லது இவ்விரண்டையும் விடுத்து மற்ற மஹாக்களை வெறுக்கிறாரா? என்பது தான் நம் சந்தேகம்!

நிற்க. அமிருதசரஸில் இதுவரைக் கைதாகி காவலில் அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மே 30 முடிய 994—அதாவது ஆயிரத்துக்கு அறுவர் குறைவு.

●

எங்கே அந்தக் "கொரில்லா?"

எந்தக் 'கொரில்லா' என்று காண்பதற்குமுன் 'கொரில்லா'வைப்பற்றி சற்றுச் சிந்திப்போம்.

'கொரில்லா' என்பது (Gorilla) ஆங்கிலச் சொல். அதற்குத் தமிழ் அர்த்தம்: ஒரு பெரிய ஆஃபிரிக்கா தேசத்து வாலில்லா மனிதக் குரங்கு! இது ஆஃபிரிக்காவின் காங்கோ பகுதியிலுள்ளது. இதுவும் மேற்கு ஆஃபிரிக்காவிலுள்ள சிம்பான்ஜீ என்ற மனிதக் குரங்கும், ஒரே இனத்தைச் சார்ந்தவை.

கொரில்லாவைப்பற்றி நினைக்கும்போது 'கொரில்லாச் சண்டை'யைப்பற்றி ஞாபகத்திற்கு வருகிறது. இச்சண்டையில் வரும் 'கொரில்லா'—'கொரில்லா' அல்ல. அதைக் 'கெரில்லா' என்று உச்சரிக்க வேண்டும். அதுவும் ஆங்கிலச் சொல் GUERILLA என்றழைக்கப்படுகிறது. இது ஸ்பானிஷ் மொழிவழி வந்தச் சொல்லாகும். 'கொரில்லா'விற்கும் 'கெரில்லா'விற்கும் வித்தியாசத்தைக் காணலாம்.

இந்தக் கெரில்லாச் சண்டை உலகில் பல பகுதிகளில் நடைபெற்றன. சீனக் கம்யூனிஸ்டுகள் இச்சண்டையின் பெரும் பயனால்தான் பணமுட்டைச் சீனாவை, மக்கள் சீனாவாக மாற்றினார்கள். இன்றைய தினம் தென் வியட்நாம் பகுதியில் தனிப்பட்ட பின்க்சுயென் (Binh Xuyen) படையும், ஹோவா—ஹாவோ (Hoa—Hao) படையும் தென் வியட்நாம் பிரதமர் நகோ டின் டயம்—ராணுவத்தை எதிர்த்துச் சமர் செய்தவண்ணமுள்ளன கெரில்லாச் சண்டையின் அடிப்படை என்னவெனின் திடுதிப்பென்று எதிர்ப்படையைத் தாக்கிவிட்டு, ஓடி ஒளிந்து மறைந்து விடுவது. அதேபோல் தொடர்ந்துத் தாக்கி எதிரிக்குத் தொந்தரவு கொடுத்து, தாம் அகப்பட்டுக் கொள்ளாமல் எதிரியைத் தோற்கடிப்பது. இத்தகையச் சண்டையை முதன் முதலில் கையாண்டவர்கள் ஸ்பெயின் தேசத்தவர்கள்தான். அப்போது 1804—1814 பத்து ஆண்டு காலமாக ஸ்பெயின்—போர்ச்சுகல் ஆகிய இரு நாடுகளில், பிரிட்டன், நெப்போலியன் படைவீரர்களை எதிர்த்துப் போரிட்டது. அப்போரைத்தான் "பெனின்சுலார்வார்" (Peninsular war)—"தீபகற்பச் சண்டை" என்று கூறுவது. இச்சண்டையில் நெப்போலியனது படைகளை எதிர்க்க, ஸ்பெயின் தேசத்தவர்கள் கையாண்ட முறைதான் கெரில்லாச் சண்டை.

"கெரில்லா"—சண்டையோடு போகட்டும். இப்போது கொரில்லா—மனிதக் குரங்கிற்கு வருவோம்.

ஃபிரென்சுகாங்கோ (ஆப்பிரிக்கா)வில் நகாவ்னி ஆற்றுப்பாய்ச்சல் கொண்ட கபான் சமவெளியுள்ளது. அங்கே மாவ்கவுண்டோ என்ற கிராமத்துப் பக்கம், ஒரு பெரிய காடு உள்ளது. அக் காட்டில் தான் நாம் கூற வந்த மனிதக் குரங்கு ஓடி மறைந்து விட்டது. அதைத்தான் அக்கிராமவாசிகள் தொடர்ந்துத் தேடி அலைகிறார்கள்.

எதற்கு அம் மனிதக் குரங்கைத் தேடுகிறார்கள் ?

அது ஒரு குழந்தையைத் தூக்கிச் சென்று, கண்ணின் மேல் பாகத்தைக் கடித்துக் கொன்றுபோட்டு விட்டு ஓடிவிட்டது. அதைப் பிடிக்க முற்பட்டிருக்கிறார்கள் அப்பகுதி மக்கள்.

எப்படி குழந்தையைத் தூக்கிச் சென்றது குரங்கு ?

வயற்காட்டிற்கு நடவு நடும் வேலையாக ஒரு தாய், இடுப்பில் ஒரு வயது குழந்தையையும், கையில் ஏழு வயது பையனையும் பிடித்துப் பாதை வழியே சென்றுகொண்டிருந்தாள்.

வழியில் ஒரு கொழுத்த மனிதக் குரங்கு தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டு இன்னது செய்வதென்று அறியாமல் திகைத்தாள். குழந்தைகள்—பாவம் !—அலறின ! விரைந்தோடி வந்த மனிதக் குரங்கு அத்தாயை முரட்டுத்தனமாகக் கீழே தள்ளி, உருட்டிப் புரட்டி, துவம்சப் படுத்தி விட்டுப் பிறகு ஏழு வயதுப் பையனைப் பிடித்தது. தாயும், பையனும் "குய்யோ முறையோ" என்று கத்துவது 'சகிக்காமலோ' என்னவோ, தாயையும் பையனையும் விட்டுவிட்டு அருகேகிடந்த ஒரு வயது பச்சிளங் குழந்தையை அள்ளி வாரி எடுத்துக் கொண்டு, காட்டினுள் நுழைந்து விட்டது.

அலறல் சத்தங் கேட்டு ஓடி வந்த அக்கம் பக்கத்து கிராம வாசிகள்—குழந்தையை நாடிக் காட்டினுள் நுழைந்தார்கள்.

காட்டில் சற்று தூரத்தில் குழந்தை மட்டும் கிடந்தது ! ஆனால் அந்தோ ! இறந்து கிடந்தது ! மனிதக் குரங்கைக் காணவில்லை.

குழந்தையின் இடது கண் மேல் பாகத்தில் குரங்கு கடித்திருக்கிறது. தேங்காய் மூடி என்று நினைத்துக் கொண்டதோ என்னமோ ! எப்படித் தான் கடித்ததோ ! அல்லது கை நகத்தால் பிடுங்கினதோ ! தெரியவில்லை ! குழந்தை உயிர் போயிற்று !

தாயையும், பையனையும் துவம்சப்படுத்தி விட்டு, பச்சிளங் குழந்தையின் உயிரையுங் குடித்திட்ட அம் மனிதக் குரங்கைப் பிடிக்காமல் விடுவதில்லை என்று தேடுகிறார்களாம் ஆஃபிரிக்கா மாவ்கவுண்டோ கிராமப் புறமக்கள் !

இவ்வாறு ஆஃபிரிக்கா செய்தி ஒன்று கூறுகிறது

மனிதக் குரங்கின் மூர்க்கத்தனத்தை நாமெல்லாம் படத்தில் தான் ("டார்ஜான்," "மைட்டி எங் ஜோ," போன்ற படங்களில் தான்) கண்டிருக்கிறோம். அதிலும் காட்டு மனிதக் குரங்கென்றால் மூர்க்கத்தனம் எவ்வளவு இருக்குமென்று ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம்.

●

தேர்தல் லடாய் !

இங்கிலாந்தில் சர். வின்ஸ்டன் சர்ச்சில், 5—4—55-ல் பிரதமர் பதவியை விட்டு விலகினார். அவரிடத்தில் சர். அந்தோணி ஈடன் வந்தமர்ந்தார். அமர்ந்த சில தினங்களில் இங்கிலாந்துக்குப் புதுப் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டுமென்றார். மே 26-ம் நாளைத் தேர்தல் நாள் என்றார். அவ்வாறே தேர்தலும் நடைபெற்றது. அத்தேர்தல் பிரச்சாரத்தின்போது 'டோரி'க் கட்சிக்கும் தொழிற் கட்சிக்குமிடையே நிகழ்ந்த 'லடாய்' சுவைத்தலுக்கு ருசியாயிருக்கிறது.

சர்ச்சில் ஆட்லியைத் தாக்கினார், ஆட்லி திருப்பி சர்ச்சிலைத் தாக்கினார்.

சர்ச்சில் அனூரின் பெவானைத் தாக்கினார் பெவான் திருப்பி சர்ச்சிலைத் தாக்கினார்.

சர்ச்சில் : அய்யா ஆட்லியாரே! நீர் ஓர் கரும்பட்டை வெண்பட்டைப் படர்ந்த குதிரை (Piebald)க்குச் சமமானீர்! உம்மிடம் எம் கட்சியாரை எதிர்க்கப் போதிய சக்தி கிடையாது! உங்களுக்கிருக்கும் சக்தி உங்கள் இடது சாரித் தொழிற் சங்கத்தார்களிடம் 'மார் அடிக்கவே' முடியவில்லை! எங்களை எப்படி உம்மால் வர்ணிக்க முடியும்?

ஆட்லி : அய்யா சர்ச்சிலாரே! நீர் ஒரு கடைந்தெடுத்தப் பச்சோந்தி என்பதை மறந்தே எம்மிடம் முட்ட வருகிறீர்! நீலத் துணியிட்ட மேசைமீது —பச்சோந்தியாரே —உம்மைவிட்டால் உடனே உமது சாயம் நீலமாகிவிடும். அடுத்த தருணம் சிகப்புத்துணியிட்ட மேசைமீது விட்டால் உமது சாயம் சிகப்பாய்விடும். எம்மை நீர் இரு வண்ணக் குதிரை (Piebald) என்றீர். பரவாயில்லை! ஆனால் நீர் பலவண்ணப் பச்சோந்தியாச்சே! நீர் முதன் முதலில் 'கன்சர்வேடிவ்' கட்சியிலிருந்ததும், அதைவிட்டுத்தாவி 'லிபரல் (மிதவாதி) கட்சியில் 18 ஆண்டுகளிருந்ததும், அதற்குப் பிறகு 'சுயேச்சை'யாக இருந்ததும், கடைசியாக தற்போது மீண்டும் 'கன்சர்வேட்டிவ்' கட்சியில் இருப்பதும் எனக்கோ, மற்றவர்களுக்கோ தெரியாதென்ற நினைப்பா உமக்கு! கிளைக்குக்கிளைத் தாவும் மேதாவிநீர் என்பதையும் மறந்து பேசாதீர்!

பிவான்—சர்ச்சில் லடாய்

சர்ச்சில் : அய்யா பிவானாரே! நீர் ஓர் கை தேர்ந்த, நெளிந்து கொடுத்து வாழும் சந்தர்ப்பவாதி (Voluble Careerist) அல்லவா?

பெவான் : அய்யா சர்ச்சிலாரே! — என்னைச் சந்தர்ப்பவாதி என்கிறீரே, நான் உம்மைப்போலவா சமயத்திற்கேற்றவாறு கட்சியில் கூடுவிட்டுக் கூடு பாய்கிறேன்? நான் ஓரே கட்சியில் தொழிற்கட்சியில் விடாமல் இருக்கிறேனே—அதற்கா உமது அகராதியில் 'சந்தர்ப்பவாதி' என்று பெயர்? உம் முதுகு உமக்குத் தெரிந்தால், நீர் ஏன் இவ்வாறெல்லாம் உளரப்போகிறீர்? அது கிடக்கட்டும்! உமது வண்டவாளமெல்லாம் யாருக்கும் தெரியாதா? பெருந்தலை நால்வர் ஒன்று கூடிப் பேசவேண்டுமென்று முதலில் கூறினீரே! அதை அமெரிக்கா நிராகரித்ததே! அது உம்முயற்சியில் தோல்வி என்று யாருக்கும் தெரியாதென்ற நினைப்பா? இப்போது ஏன் மறுத்தவர்களே சம்மதிக்கிறார்கள்? உமது டோரிக் கட்சியே மீண்டும் அதிகாரத்துக்கு வரவேண்டுமென்ற சுயநலப்போக்கு ஆக அமெரிக்காவிற்கு எங்களிடம் எவ்வளவு பயம் இருக்கிறது பார்த்தீர்களா!

அது போகட்டும்! நீர் உமது வாழ்நாளில் என்ன சாதித்துவிட்டீர்—மக்களுக்காக! உங்களை விட, இந்தியாவில் உதித்த மகாத்மா காந்தி ஆயிரமடங்கு அதிகமாக மக்கள் சேவை செய்து காண்பித்துவிட்டுப் போனார்! அவரைப்போய் நீர் வாய் கூசாமல் 'அரை நிர்வாணப் பக்கிரி' (Half naked Fakir) என்றீரே தகுமா!

எங்கள் தொழிற்கட்சி ஆட்சியிலுள்ளபோது இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கினோம்! உம் கட்சி ஆட்சியின்போது இந்தியாவைக் கொள்ளையடித்தீர்கள்! நினைவிருக்கட்டும்!

★

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோமு அச்சகம் 16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை-1.